தினமணி

**கடலூர் மாவட்டத்தில் தொடர் மழை: 1.24 லட்சம் ஏக்கர் பயிர்கள் மூழ்கின**

First Published : 03 Dec 2010 02:29:02 AM IST



சிதம்பரம் தாலுகா, காட்டுமன்னார்கோவில் அருகே உள்ள கீழவன்னியூர் கிராமத்தில் நீரில் மூழ்கியுள்ள நெற்பயிர்கள்.

கடலூர், டிச. 2: பலத்த மழை காரணமாக கடலூர் மாவட்டத்தில் 1.24 லட்சம் ஏக்கரில் பயிர்கள் தண்ணீரில் மூழ்கி இருப்பதாக வேளாண் துறை வியாழக்கிழமை தெரிவித்தது.

÷வங்கக் கடலில் ஏற்பட்ட புயல் சின்னம் காரணமாக கடலூர் மாவட்டத்தில் கன மழை கொட்டி வருகிறது. பெண்ணையாறு, கெடிலம் ஆறு, பரவனாறு, உப்பனாறு, வெள்ளாறு, மணிமுத்தாறு, கொள்ளிடம் ஆகியவற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடிக் கொண்டு இருக்கிறது.

÷வீராணம் ஏரி, பெருமாள் ஏரி, வாலாஜா ஏரி, சேத்தியாத்தோப்பு அணைக்கட்டு, மணிமுத்தா அணைக்கட்டு, பெலாந்துரை அணைக்கட்டு, மேமாத்தூர் அணைக்கட்டு உள்ளிட்டவை நிரம்பி விட்டன. இவற்றில் இருந்து பெருமளவுக்கு உபரிநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. வெலிங்டன் ஏரியில் நீர்மட்டம் 24.4 அடியாக நிலை நிறுத்தப்பட்டு வருகிறது. ÷உபரி நீர் 1,600 கன அடி வெள்ளாற்றில் திறந்து விடப்படுகிறது. புவனகிரி வெள்ளாற்றில் தற்போது விநாடிக்கு 86 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் சென்று கொண்டு இருக்கிறது. கொள்ளிடத்தில் 40 ஆயிரம் கனஅடி நீர் சென்று கொண்டு இருக்கிறது.

÷வெள்ளாற்றில் பெருமளவுக்கு வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு உள்ளதால் மிராளூர், மேலமணக்குடி, மணவெளி, பூதவராயன்பேட்டை உள்ளிட்ட 25-க்கும் மேற்பட்ட கிராமங்களில் வெள்ளம் சூழ்ந்து உள்ளது. 15 ஆயிரம் ஏக்கரில் நெல் பயிர்கள் மூழ்கி உள்ளன. ÷பயிர்களுக்கு மேல் அரை அடி முதல் 3 அடி உயரம் வரை தண்ணீர் தேங்கி உள்ளது. நட்டு 15 நாள்கள் முதல் 1 மாதம் வரையிலான இந்தப் பயிர்களில் பெரும்பாலானவை அழுகிவிடும் என்றும் சேத்தியாத்தோப்பு அணைக்கட்டு பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் முட்லூர் விஜயகுமார் தெரிவித்தார்.

÷வீராணம் கடைமடைப் பகுதிகளான கோவிலாம்பூண்டி, கீழ்அணுவம்பட்டு, மஞ்சக்குழி, நஞ்சைமகத்து வாழ்க்கை, புஞ்சைமகத்து வாழ்க்கை உள்ளிட்ட 25 கிராமங்கள் அபரிமிதமான மழைநீரால் சூழப்பட்டு உள்ளன.

÷வெள்ளாறு, கொள்ளிடம் ஆறுகளில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுவதால், வயல்களில் தேங்கும் நீரை வெளியேற்ற முடியவில்லை. 25 ஆயிரம் ஏக்கர் நெல் பயிர்கள் தண்ணீரில் மூழ்கி உள்ளன என்று பாசிமுத்தான் ஓடை விவசாயிகள் சங்கத் தலைவர் பி.ரவீந்திரன் தெரிவித்தார்.

÷வீராணம் ஏரியின் உபரிநீர் பெருமளவுக்கு வெளியேற்றப்பட்டு வெள்ளியங்கால் ஓடையில் கொள்ளளவுக்கு அதிகமான நீர் செல்வதால், திருநாரையூர், சிறகிழந்தநல்லூர், வீரநத்தம், எடையார் உள்ளிட்ட 25 கிராமங்களை வெள்ளம் சூழ்ந்து இருப்பதாகவும், 10 ஆயிரம் ஏக்கர் நெல்பயிர் தண்ணீரில் மூழ்கிக் கிடப்பதாகவும் கொள்ளிடம் கீழணை பாசன விவசாயிகள் சங்கச் செயலர் விநாயகமூர்த்தி தெரிவித்தார்.

ஏரி தூர்ந்து போனதால் 1.44 டி.எம்.சி.யாக இருந்த வீராணம் ஏரியின் கொள்ளளவு, 0.96 டி.எம்.சி.யாக தற்போது குறைந்து விட்டது. வீராணம் ஏரியை ஆழப்படுத்தாமல், கரைகளை மட்டும் உயர்த்துவதும், ஏரியில் மழைக்காலத்தில் 44 அடிக்கு மேல் நீரைத் தேக்கி வைத்ததுமே, சிதம்பரம் காட்டுமன்னார்கோவில் தாலுகாக்களில் வெள்ளச் சேதத்துக்கு காரணம் என்று, காவிரி டெல்டா பாசன விவசாயிகள் சங்க துணைத் தலைவர் கண்ணன் தெரிவித்தார்.

÷தொடர்ந்து பெய்து வரும் மழையால் கடலூர் மாவட்டத்தில் 1.24 லட்சம் ஏக்கரில் பயிர்கள் தண்ணீரில் மூழ்கி உள்ளன. இதில் நெல் பயிர் மட்டும் 80,675 ஏக்கர், தோட்டக் கலைப் பயிர்கள் 3 ஏக்கர் என்றும் வேளாண்துறை தெரிவித்துள்ளது.

**உணவுப் பணவீக்கம் 8.6 சதவீதமாகக் குறைவு**

First Published : 03 Dec 2010 01:54:25 AM IST



புது தில்லி, டிச.2: நாட்டின் உணவுப் பணவீக்கம் நவம்பர் 20-ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் 8.6 சதவீதமாகக் குறைந்தது. குறுவை சாகுபடி பயிர்கள் சந்தைக்கு வரத் தொடங்கியதால் காய்கறிகள், பருப்பு வகைகளின் விலைகள் கணிசமாகக் குறைந்தன.

இதனால் நவம்பர் 13-ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் 10.15 சதவீதமாக இருந்த பணவீக்கம் இப்போது குறைந்துள்ளது.

தொடர்ந்து 7-வது வாரமாக பணவீக்கம் குறைந்து வருவது குறிப்பிடத்தக்கது. 2009-ம் ஆண்டு மே மாதத்துக்குப் பிறகு உணவுப் பணவீக்கம் இந்த அளவுக்குக் குறைந்துள்ளது இதுவே முதல் முறை.

பருப்பு வகைகளின் விலைகள் 10 சதவீதம் வரை குறைந்துள்ளது. காய்கறிகளின் விலை 3 சதவீதம் குறைந்து காணப்பட்டது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் உருளைக் கிழங்கு விலை அதிகபட்சமாக 42.22 சதவீதம் குறைந்துள்ளது.

கோதுமை விலை 3.16 சதவீதம் குறைந்ததாக அரசு வெளியிட்ட புள்ளிவிவரக் கணக்கு தெரிவிக்கிறது. இருப்பினும் முட்டை, இறைச்சி, மீன் ஆகியவற்றின் விலைகள் 15.58 சதவீதம் உயர்ந்தது.

காய்கறிகளில் வெங்காயத்தின் விலை 16.86 சதவீதம் உயர்ந்து காணப்பட்டது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் அரிசியின் விலையும் 1.84 சதவீதம் உயர்ந்திருந்தது. இதேபோல பழங்கள், பால் ஆகியவற்றின் விலை முறையே 19.27 சதவீதமும், 17.76 சதவீதமும் உயர்ந்தது.

உணவுப் பணவீக்கம் ஒற்றை இலக்க அளவுக்குக் குறையும் என்று கடந்த வாரமே கணித்திருந்ததாக பொருளாதார ஆலோசகர் கெளசிக் பாசு தெரிவித்தார். உணவுப் பணவீக்கம் குறைந்ததால் ஒட்டுமொத்த பணவீக்கம் நடப்பு நிதி ஆண்டு இறுதியில் 6 சதவீத அளவுக்குக் குறையும் என்று அவர் கருத்து கூறினார்.

பிரணாப் நம்பிக்கை: உணவுப் பொருள்களின் விலை மேலும் குறையும் என்று மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி நம்பிக்கை தெரிவித்தார். ஏற்கெனவே ஒட்டுமொத்த பணவீக்கம் ஒற்றை இலக்க அளவுக்குக் குறையத் தொடங்கியுள்ளது. இப்போது உணவுப் பணவீக்க விகிதம் இரட்டை இலக்கத்திலிருந்து ஒற்றை இலக்கத்துக்குக் குறைந்துவிட்டது. இதனால் ஒட்டுமொத்த பணவீக்கம் எதிர்பார்த்த அளவுக்குக் குறையும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது என்றார் பிரணாப்.

**கரும்பு பயிருக்கு இரும்புச் சத்து...**

First Published : 02 Dec 2010 11:07:28 AM IST

திருநெல்வேலி, டிச. 1: தமிழகத்தில் பயிரிடப்படும் முக்கிய பணப் பயிர்களில் ஒன்று கரும்பு. நவீன தொழில் நுட்பங்களான தீவிர சாகுபடி முறைகளாலும், அதிக அளவு மகசூல் தரக்கூடியதும் அதிக அளவு ஊட்டச்சத்து எடுத்துக் கொள்ளக் கூடியதுமானது கரும்பு பயிர்.

நுண்ணூட்டச் சத்துகளின் குறைபாடினால் பயிர்களின் வளர்ச்சி பாதிக்கப்படுவதோடு மகசூலும் குறையும். கரும்பைப் பொறுத்தவரை இரும்புச் சத்து மிகவும் அவசியம். களர் நிலத்தில் மண்ணின் காரத்தன்மை 8.5-க்கு மேல் இருந்தால் மண்ணில் கரையும் நிலையில் உள்ள இரும்புச் சத்து கரையாநிலைக்கு மாற்றப்பட்டு பயிருக்கு கிடைக்காமல் போகும். சுண்ணாம்புச் சத்து அதிகமுள்ள

நிலங்களில் இருப்புச் சத்து நீரில் கரையாதபடி மண்ணில் தங்கிவிடும். இதனால் இரும்புச் சத்து மண்ணில் அதிகம் இருந்தாலும் பயிருக்கு கிடைக்காது.

பயிரில் பொட்டாசியம் அளவு குறையும்போது இரும்புச் சத்தின் இயக்கம் தடைப்பட்டு தண்டில் தங்கி விடுகிறது. இதற்கு போதிய பயிர்சுழற்சி இல்லாமையும் ஒரு காரணம்.

முதலில் ஆங்காங்கே பச்சையம் குறைந்து இலைகள் வெளுத்து மஞ்சள் நிறத்துடன் காணப்படும். ஆனால் நரம்புகள் பச்சையாகவே இருக்கும். குறைபாடு அதிகமாகும் போது குருத்து இலைகள் காகிதம் போன்று வெளுத்து, கருகியும் காணப்படும்.

நுண்ணூட்டச் சத்தினை மண்ணில் இடுவதற்குப் பதிலாக அன்னபேதி உப்பு 2 சத கரைசலை இலைவழியாக தெளிப்பதால் பயிர் விரைவாக எடுத்துக் கொண்டு குறைப்பாட்டை நிவர்த்தி செய்கிறது.

2 சத சரைசலை நடவுக் கரும்பில் நடவு செய்த 90, 105 மற்றும் 120 நாள்களில் தெளிக்க வேண்டும். மறுதாம்புப் பயிரில், மறுதாம்பு விட்ட 15ஆம் நாள் தெளிக்க வேண்டும்.

இலைகள் பச்சையாக மாறாவிடில் 15 நாள்கள் கழித்து மீண்டும் தெளிக்கலாம். தெளிக்கும் போது இரண்டு கிலோ யூரியாவை கலந்து கொண்டால் இலைகள் இரும்புச் சத்தினை எடுத்துக் கொள்ளும் திறன் அதிகரிக்கிறது என வேளாண்துறை உதவி இயக்குநர் மு. வெள்ளைப்பாண்டி தெரிவித்துள்ளார்.

**வாசுதேவநல்லூர் வட்டாரத்தில் உளுந்து அபிவிருத்தி செயல்விளக்கம்**

First Published : 02 Dec 2010 11:07:15 AM IST

சிவகிரி, டிச. 1:வாசுதேவநல்லூர் வட்டாரத்தில் உள்ள விவசாயிகளுக்கு உளுந்து பயறு மகசூலில், டிஏபி கரைசல் தெளித்தல் மூலம் அபிவிருத்தி செய்தல் தொடர்பான தொழில்நுட்ப செயல்விளக்கப் பயிற்சி நடைபெற்றது.

வட்டார வேளாண்மைத் துறையின் நீர்வள நிலவளத்திட்டத்தின் கீழ், வாசுதேவநல்லூர் அருகில் உள்ள சங்குபுரம் கிராமத்தில் நடைபெற்ற பயிற்சிக்கு வேளாண்மை உதவி இயக்குநர் இல. பெருமாள் தலைமை வகித்து பேசியதாவது: உளுந்து விதைப்பு செய்த 35 முதல் 40 நாள்களில் முதல் முறையாகவும், தொடர்ந்து 15 நாள்கள் கழித்து இரண்டாவது முறையாகவும் 2 சதவிகித டிஏபி கரைசல் தெளித்தால் கூடுதல் மகசூல் பெறலாம் என்றார்.

பயிற்சியில் கலந்துகொண்டு பேசிய மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் துரைப்பாண்டியன், விவசாயிகள் பயறுவகை உற்பத்தியைப் பெருக்கினால் நாட்டின் தேவைக்காக வெளிநாடுகளிலிருந்து பயறு வகைகளை இறக்குமதி செய்வதைத் தவிர்க்கலாம் என்றார்.

மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் தேவசகாயம் பேசியதாவது: வட்டார உளுந்து விவசாயிகளுக்கு முதல் முறை டிஏபி கரைசல் தெளிக்க 10 கிலோ டிஏபியும், தொடர்ந்து இரண்டாவது

முறை தெளிப்பதற்கு 10 கிலோவும் என மொத்தம் 20 கிலோ டிஏபி உரம் மானியமாக வழங்கப்படுகிறது என்றார்.

இதனைத் தொடர்ந்து அங்குள்ள பாலசுப்பிரமணியன் என்பவரது வயலில், வட்டார வேளாண்மை துணை அலுவலர் ரவிச்சந்திரன் 2 சதவிகித டிஏபி கரைசல் தெளிக்கும் செயல்விளக்கத்தைச் செய்து காட்டினார். பயிற்சி ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் செல்லையா, ஆறுமுகம், சரவணக்குமார் ஆகியோர் செய்திருந்தனர். முன்னதாக ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் செல்லமுத்தையா பாண்டியன் வரவேற்றார். வேளாண்மை உதவி அலுவலர் அண்ணாத்துரை நன்றி கூறினார்.

**பிசான நெல் நடவுக்கு துத்தநாக சல்பேட்**

First Published : 02 Dec 2010 11:06:55 AM IST

திருநெல்வேலி, டிச. 1: பாளையங்கோட்டை வட்டாரத்தில் தற்போது பிசான நெல் நடவு செய்யப்பட்டு வருகிறது. இதற்கு நுண்ணூட்டச் சத்தான துத்தநாக சல்பேட்டின் தேவை அவசியம் என வேளாண்மைத் துறை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து திருநெல்வேலி வேளாண் உதவி இயக்குநர் மு. வெள்ளைப்பாண்டி
வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நெற்பயிருக்கு மிகவும் முக்கியமாக தேவைப்படும் நுண்சத்துக்களில் துத்தநாகச் சத்தும் ஓன்று.
நெற்பயிர் வளர்வதற்கு தேவைப்படும் பயிர் ஊக்கியான இன்டோல் அசிட்டிக் அமிலம், உற்பத்தி, பூ பூத்து மொட்டு மலர்தல், சூல் தரித்தல், மணி பிடிக்கவும், நெற்பயிர் நீரை சீராக உறிஞ்சவும் தேவைப்படுகிறது.

துத்தநாகச்சத்து பற்றாக்குறை ஏற்பட்டால் நெல்லின் அடி இலையில் நரம்பு பகுதிக்கு இடைப்பட்ட பகுதி வெளுத்து காணப்படும். இலைகளில் பழுப்பு நிறப் புள்ளிகளும், கோடுகளும் நுனியிலிருந்து கீழ் நோக்கி ஏற்படும்.

இலையின் அளவு சுருங்கி விடும். வளர்ச்சி குன்றி பயிர் கட்டையாகவும் சமமற்ற வித்தியாசமான உயரமுள்ள செடியாகவும், புதர் போன்று கரைந்தும் குத்துக்கள் தென்படும். திடீரென எண்ணிக்கை குறையும். பயிர் துருப்பிடித்த இலைகளாக தெரியும். இலைகள் காய்ந்து பயிரின் வளர்ச்சி நின்றுவிடும். வயலில் நடவு நட்டு நான்கு வாரத்துக்குள் இந்த அறிகுறிகள் தெரியும்.

இக் குறைபாட்டை நீக்க ஏக்கருக்கு துத்தநாக சல்பேட் 10 கிலோ அடியுரமாக மண்ணுடன் கலந்து இட வேண்டும். நிலத்தை உழுது சமன் செய்து பின் மண்ணின் மேலாக நடவுக்கு முன் தூவி விட வேண்டும். 20 நாள்களில் அடியுரம் இட வேண்டும்.

பாளையங்கோட்டை, சிவந்திப்பட்டி விரிவாக்க மையங்களில் போதுமான அளவு துத்தநாக சல்பேட் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. தேசிய வேளாண் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 50 சதம் மானியத்தில் வழங்கப்படுகிறது. ஒரு கிலோ துத்தநாக சல்பேட்டின் முழுவிலை ரூ. 32. மானியம் விலை கிலோ ரூ. 16. பிசான நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் வேளாண் விரிவாக்க மையங்களை அணுகி துத்தநாக சல்பேட் உரத்தை மானிய விலையில் பெற்று அடியுரமாக இட்டு பயன்பெறலாம் என்றார் அவர்.

**"கரூர் மாவட்டத்தில் 40 ஆயிரம் ஏக்கரில் நெல் சாகுபடி'**

First Published : 02 Dec 2010 03:13:39 PM IST

கரூர், டிச.1: கரூர் மாவட்டத்தில் 40 ஆயிரம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளதôக வேளாண் மை துறை இணை இயக்குநர் கே. ஜெகதீசன் தெரிவித்தார்.

கரூர் மாவட்டத்தில் கடந்த சில வôரங்களாக வடகிழக்குப் பருவமழை பெய்து வருகிறது. இதனôல், பெரும்பாலான ஏரிகளின் நீர்மட்டம் கணிசமாக அதிகரித்துள்ளது. எனினும், தற்போதைய ம ழையானது கரூர் மாவட்டத்தின் ஆண்டு சராசரியைவிட சற்றேக் கூடுதலானது என்று கூறப்படுகிறது. இந்த மழையால் கரூர் மாவட்டத்திலுள்ள பெரிய ஏரிகளில் ஒன்றான பஞ்சப்பட்டி ஏரியின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது.

கடந்த 5 ஆண்டுகளாகத் நீரே இல்லாத இந்த ஏரியில், தற்போது 8.8 அடி நீர் உள்ளது. ஏரியின் மெô த்த நீர் மட்டம் 18 அடியாக இருந்தபோதிலும், இந்த அளவிற்கு ஏரி நிரம்பியிருப்பதே பெரிய விஷய மென விவசாயிகள் கருதுகின்றனர். மேலும், தற்போதைய மழை தொடர்ந்தால், ஏரி முழுமையாக நிர ம்பும் வôய்ப்புள்ளதôகவும் தெரிகிறது.

இதேபோல, மாவட்டத்தின் பிற பகுதிகளிலுள்ள வெள்ளியணை, உப்பிடமங்கலம், சாந்தப்பாடி, பெ த்தாட்சி அணைகளிலும் நீர்மட்டம் கணிசமாக உயர்ந்துள்ளது.

கரூர் மாவட்டத்தின் சராசரி மழையளவு ஆண்டுக்கு 652.20 மி.மீட்டராக உள்ளது. ஆனôல், நவம்பர் 26 வரை கரூர் மாவட்டத்தில் பெய்த மழையின் சராசரி 724.67 மி.மீ. ஆகும். கடந்த 5 ஆண்டுகளில் 2005 ஆம் ஆண்டு 1,142.71 மி.மீ. மழையை மாவட்டம் பெற்றது.

அப்போதுதான் கரூர் அமராவதி பாலத்தின் இணைப்புச் சாலை துண்டிக்கப்பட்டதோடு, பெரிய அளவிலான வெள்ளச் சேதமும் ஏற்பட்டது. தொடர்ந்து 2006-ல் 533.63 மி.மீ., 2007-ல் 767.57 மி.மீ., 2008-ல் 962.41 மி.மீ., 2009-ல் 611.51 மி.மீ. மழை பதிவôனது.

எனவே, மாவட்டத்தின் சராசரியை மட்டுமே எட்டியுள்ள இந்த மழையால் மாவட்டத்தில் எந்தப் பாதி ப்பும் ஏற்படவில்லையென கரூர் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் கே. ஜெகதீசன் தெரிவித்தார்.

ஆண்டு முழுவதும் பெய்ய வேண்டிய மழையானது தற்போது மெ0த்தமாகப் பெற்றுள்ளது. இதனா0ல், அதிக மழை போலத் தெரிகிறது. தற்போது மாவட்டத்தில் பயிரிடப்பட்டுள்ள சுமார் 40 ஆயிரம் ஏக்கர் நெல் பயிருக்கும், இந்த மழை அதிக நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் மழை பெய்தால் மட்டுமே பயிர்களுக்குப் பாதிப்பு ஏற்படும். எனினும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையில் நிர்வா0கம் ஈடுபட்டுவருகிறது. பஞ்சப்பட்டி ஏரியின் நீர்மட்டம் குறிப்பிட்ட அளவு உய ர்ந்துள்ளது மகிழ்ச்சியான செய்தியாகும்.

இதனா0ல், 114.5 ஹெக்டேர் ஆயக்கட்டுகள் பயனடையும். மேலும், வறட்சிப் பகுதியான இங்கு, ஏரியின் உயரும் நீர் மட்டத்தால் சுமார் 500 ஏக்கர் வரை நிலத்தடி நீர்மட்டமும் உயரும். எனினும், அதிகப்படியான மழையை எதிர்பார்த்துள்ளோம் என்றார் அவர்.

**காரைக்காலில் சம்பா பயிருக்கு பாதிப்பில்லை**

First Published : 02 Dec 2010 03:25:23 PM IST

காரைக்கால், டிச. 1: காரைக்கால் மாவட்டத்தில் பெய்து வரும் மழையால் சம்பா பயிருக்கு இதுவரை எந்த பாதிப்புமில்லை என வேளாண் துறையும், விவசாயிகள் சங்கமும் தெரிவித்துள்ளது.

காரைக்காலில் கடந்த வாரம் தொடங்கி தொடர் மழை பெய்து வருகிறது. பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளனவா என்பது குறித்து கூடுதல் வேளாண் இயக்குநர் கே. மதியழகன் தலைமையில் வேளாண் துறை அதிகாரிகள் குழு பல்வேறு இடங்களில் கடந்த 2 நாள்களாக ஆய்வு மேற்கொண்டு வருகிறது.

இதுகுறித்து கே. மதியழகன் புதன்கிழமை கூறியது: காரைக்கால் மாவட்டத்தில் சம்பா நடவு இலக்கு 5000 ஹெக்டேர். இதுவரை 4000 ஹெக்டேரில் நடவுப் பணி முடிவுற்றுள்ளது. அதுபோன்று தாளடியும் 1000 ஹெக்டேர் இலக்கில் 900 ஹெக்டேர் முடிந்துள்ளது. பெரும்பாலான இடங்களில் விளைநிலங்களை ஆய்வு செய்யும்போது, மழையால் பயிர் பாதிக்கப்பட்டவில்லை என்பதை அறிய முடிகிறது.

வரும் நாள்களில் தொடர்வது பலத்த மழையாக இல்லாமல் இருந்தால், காரைக்காலில் விவசாய உற்பத்தி இலக்கை நிச்சயம் அடையமுடியும் என்றார்.

காரைக்கால் பிரதேச விவசாயிகள் நலச் சங்கத் தலைவர் பி. ராஜேந்திரன் கூறியது: காரைக்காலில் 4 ஆயிரம் ஹெக்டேர் அளவுக்கு நடவுப் பணி முடிந்திருந்தாலும், சுமார் 300 ஹெக்டேரில் மட்டுமே பாதிப்பு தெரிகிறது. மேலும், மழை பெய்தால் ஏற்கெனவே நடவு செய்திருந்தவை யாவும் பாதிக்கப்படும் என்றார்.

**விவசாயிகள் டிச. 15-க்குள் பயிர்க் காப்பீடு செய்யலாம்**

First Published : 02 Dec 2010 03:29:12 PM IST

தஞ்சாவூர், டிச. 1: சம்பா, தாளடி நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் பயிர்களுக்கு காப்பீடு செய்து பயன்பெறலாம் எனத் தெரிவித்தார் மாவட்ட ஆட்சியர் எம்.எஸ். சண்முகம். இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

ஓர் ஏக்கருக்கு பிரீமியத் தொகை ரூ. 260. கடன் பெறாத சிறு, குறு விவசாயிகளுக்கு 55 சதம் மானியம் ரூ. 117 ஆகும். நெல் சாகுபடி விவசாயிகள் அதற்கான காப்பீட்டுத் தொகையை கூட்டுறவு மற்றும் வணிக வங்கிகளில் டிச. 15 ஆம் தேதிக்குள் செலுத்தி உரிய ரசீது பெற்றுக் கொள்ளலாம்.

மேலும், கூட்டுறவு மற்றும் வணிக வங்கிகளில் கடன் பெற்றவர்களுக்கு கடன் வழங்கிய போது பயிர்க் காப்பீட்டுத் தொகை பிடித்தம் செய்து கொள்ளப்படுகிறது. கடன் பெறாத விவசாயிகளின் நலனுக்காக இந்த வாய்ப்பு அளிக்கப்படுகிறது. மாவட்டத்தில் பயிர்க் கடன் பெறாத விவசாயிகள் 37 பேர் மட்டுமே தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் ரூ. 18.02 லட்சத்துக்கு பயிர்க் காப்பீடு செய்துள்ளனர்.

காப்பீட்டுத் தொகையை விவசாயிகள் தங்களுக்கு அருகிலுள்ள கூட்டுறவு மற்றும் வணிக வங்கிகளில் செலுத்தலாம்.

தினமலர்

**பருத்தி ஏற்றுமதிக்கு அனுமதித்ததால் விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 03,2010,02:09 IST

சென்னை: பருத்தி மற்றும் பருத்தி நூல் உள்ளூர் தேவைக்கு போதுமான அளவு கிடைப்பதை உறுதி செய்யுமாறு, பிரதமருக்கு கடிதம் மூலம் முதல்வர் வலியுறுத்தியுள்ளார். பிரதமர் மன்மோகன் சிங்குக்கு முதல்வர் கருணாநிதி எழுதியுள்ள கடிதம்: பருத்தியை ஏற்றுமதிக்கு அனுமதிக்கும் முன், உள்ளூர் தேவைக்கு முழுமையாக கிடைப்பதை உறுதி செய்ய வேண்டியதன் அவசியத்தை கடந்த செப்டம்பரில் எழுதிய கடிதத்தில் விளக்கியிருந்தேன். ஆனால், தற்போது நவம்பர் 1ம் தேதியில் இருந்து, 55 லட்சம் பேல்கள் ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. சந்தேகமின்றி, கடந்த இரண்டு மாதங்களாக நூல் விலை தொடர்ந்து உயர்ந்து வருவதற்கு இந்த முடிவு காரணம். கடந்த செப்டம்பர் கடைசி வாரத்தில் இருந்து, நவம்பர் கடைசி வாரம் வரை, பருத்தி விலை, 20 சதவீதம் உயர்ந்துள்ளது. மேலும், பருத்தி வாங்குவதில் ஏற்றுமதியாளர்கள் தீவிரமாக இறங்கியுள்ளதால், உள்ளூர் சந்தைக்கு தேவையான

அளவு, நூல் வரத்து இல்லை. பொதுவாகவே, சந்தைக்கு புதிதாக வரும் வரவுகளால், அக்டோபருக்கு பின் உள்ள நான்கு முதல் ஐந்து மாதங்கள், பருத்தி விலை சரிந்து விடும். ஆனால், இந்த ஆண்டு, 55 லட்சம் பேல்கள் பருத்தி ஏற்றுமதிக்கு அனுமதித்ததால், கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாத நிலையில், சந்தையில் இருப்பு வைக்க பருத்தியே இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. பருத்தி ஏற்றுமதியால் பயனடையும் நமது போட்டி நாடான சீனா, எப்போதும், 33 சதவீதம் பருத்தி இருப்பு வைத்துக் கொள்கிறது. ஆனால், இந்தியாவில் பருத்தி இருப்பு வெறும், 17 சதவீதம் தான். எனவே, பருத்தி எடுக்கும் சீசனான இம்மாதங்களில் நமது பருத்தி இருப்பை அதிகரித்து வைக்க வேண்டியது மிகவும் அவசியம். வரும் ஜனவரி வரை தொடரும் இந்த சீசனில், பருத்தி இருப்பை அதிகரித்து வைத்தால், வேளாண்மைக்கு அடுத்தபடியாக அதிகளவு வேலைவாய்ப்பை தரும் ஜவுளித் துறைக்கு, தொடர்ந்து மூலப் பொருள் கிடைக்கும். தமிழகத்தில், கைத்தறிகளும், விசைத்தறிகளும் சேர்த்து, 50 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பை அளித்து வருகின்றன. நாடு முழுவதும் கணக்கிட்டால், இதன் மூலம் கிடைக்கும் வேலைவாய்ப்பு பல மடங்கு அதிகமாக இருக்கும். எனவே, உள்ளூர் ஜவுளித் தொழிலுக்கான தேவையை இருப்பு வைக்கும் வரை, பருத்தி ஏற்றுமதிக்கான உத்தரவை உடனே ரத்து செய்ய தாங்கள் உத்தரவிட வேண்டும். உள்ளூர் சந்தைக்கு போதுமான அளவு வரத்து வந்ததும், பருத்தி விலை குறைந்துவிடும். பருத்தி விலை நிலவரம் காரணமாக, நூல் விலையும் மிக அதிகமாக உயர்ந்துள்ளது. மேலும், பெருமளவு நூல் ஏற்றுமதிக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாலும், நெசவுத் தொழில் மற்றும் ஆயத்த ஆடை உற்பத்தி தொழிலுக்கு தேவையான அளவு நூல் கிடைப்பது குறைந்துள்ளது. கைத்தறி, விசைத்தறி மற்றும் பின்னலாடைக்கு பயன்படுத்தப்படும் நூல்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு விதமானவை.  எனவே, ஒவ்வொரு வகையும் போதுமான அளவு உள்ளூர் தேவைக்கு இருப்பது அவசியம். எனவே, நூல் ஏற்றுமதிக்கான அளவை நிர்ணயம் செய்து, நூல் ஏற்றுமதிக்கு வரியையும் விதிக்க வேண்டும். இவ்விஷயத்தில் தாங்கள் விரைவாக தலையிட்டு, பருத்தி மற்றும் நூலுக்கான மூலப் பொருள் உள்ளூர் தேவைக்கு முழுமையாக கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும். இவ்வாறு முதல்வர் கருணாநிதி வலியுறுத்தியுள்ளார்.

**நாற்றங்கால் உற்பத்தியிலும் இயந்திரங்களை பயன்படுத்துவது அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 03,2010,02:06 IST

செங்கல்பட்டு: ஆட்கள் பற்றாக்குறையால், விவசாயிகள் இயந்திரங்களை பயன்படுத்துவது அதிகரித்து வருகிறது. நாட்டின் முதுகெலும்பாக திகழ்வது விவசாயம். ஆனால் இன்று விவசாயம் மிகவும் நலிவடைந்து வருகிறது. எந்தப் பொருளையும் உற்பத்தி செய் பவர் அதற்குரிய விலையை நிர்ணயிக்கிறார். ஆனால், விவசாயி மட்டும் தான் விளைவித்த பொருளுக்கு விலை நிர்ணயம் செய்ய முடியாத நிலை உள்ளது. அரும் பாடுபட்டு உணவுப் பொருட் களை உற்பத்தி செய்யும் விவ சாயிக்கு

கிடைக்கும் லாபத்தை விட அதை வாங்கி விற்கும் வியா பாரிகளும், இடைத்தரகர்களும் அதிக லாபம் பெறுகின்றனர். போதிய லாபம் இல்லாதது, வறட்சி, ஆள் பற்றாக்குறை உட்பட பல்வேறு காரணங் களால் விவசாயிகள் விவசாயம் செய்வதை விட்டுவிட்டு வேறு வேலைகளுக்கு செல்ல துவங்கி யுள்ளனர். நிலத்தின் மதிப்பு அதிகரித் துள்ளதால், விவசாய நிலங்கள் வீட்டு மனைகளாக மாறத் துவங்கியுள்ளன. இதனால், விவசாய நிலங்களின் பரப்பு வேகமாக குறைந்து வருகிறது. விவசாயத்தை மட்டும் நம்பி யுள்ள விவசாயிகள் தொடர்ந்து விவசாயம் செய்கின்றனர். அவர் களும் வேலைக்கு ஆள் கிடைக் காமல் அவதிப்படுகின்றனர். இதனால், விவசாயத்தில் இயந்திரங்களைப் பயன்படுத்துவது அதிகரித்து வருகிறது. ஏரிகள் மாவட்டமான காஞ்சிபுரம் மாவட்டத்தில் முன், பல ஆயிரம் எக்டர் நிலப்பரப்பில் விவசாயம் நடந்தது. தற்போது தொழிற்சாலைகள் பெருக்கம் காரணமாக விவ சாயம் குறைந்து விட்டது. விவசாய வேலை செய்தவர்கள் தனியார் தொழிற்சாலைகளில் வேலைக்கு செல்கின்றனர். வேலை உறுதி திட்டம் அனைத்து ஊராட்சிகளிலும் செயல்படுத்தப்படுவதால் விவசாய வேலைக்கு ஆட்கள் கிடைப்பதில்லை. எனவே, விவசாயிகள் இயந்திரங்களை பயன்படுத்த துவங்கியுள்ளனர். முன்பு நாற்று நடவு, களை பறித்தல், அறுவடை போன்ற வற்றுக்கு இயந்திரங்களைப் பயன்படுத்தினர். தற்போது, நாற்றங்கால் உற்பத்திக்கும் இயந்திரம் பயன்படுத்துகின் றனர். இயந்திரத்தை பயன்படுத்தி நாற்றங்கால் உற்பத்தி செய்யும் முறை பாய் நாற்றங்கால் முறை என அழைக்கப்படுகிறது. பொதுவாக பாய்நாற்றங்கால் முறையில் நிலத்தில் அரை அடிஉயரத்திற்கு மண் பரப்பி பாத்திபோல் கட்டுவர். அதன் மீது பிளாஸ்டிக் பேப்பர்களை விரித்து உரம் கலந்த மண் கொட்டி விதை விதைப்பர். இம்முறையில் தண்ணீர் குறை வாக செலவானாலும் ஆட்கள் தேவை. இதை நிவர்த்தி செய்ய தற்போது இயந்திரம் மூலம் பாய்நாற்றங்கால் விடும் முறை அறிமுகமாகியுள்ளது. இயந்திர பாய்நாற்றங்கால் முறையில் விவசாயிகள் ஆட் களை தேடத் தேவையில்லை. இயந்திரம் வாடகை விடுபவர் களிடம் ஏக்கருக்கு 2500 ரூபாய் வாடகை செலுத்தினால் போதும். அவர்களே வந்து இயந்திரத்தின் மூலம் அதற்கென உள்ள தட்டு களில் மண் மற்றும் விதைகளை பரப்பி நாற்றுவிடுவர். 15ம் நாளில் நாற்று வளர்ந்து விடும். அவர்களே நாற்றை பறித்து இயந்திரம் மூலம் நடவு செய்து தருவர். சாதாரண முறையில் விவ சாயம் செய்தால் ஒரு ஏக்கருக்கு 25 கிலோ நெல் விதை தேவை. நாற்றங்கால் தயாரானதும் நாற்றங்கால் பறிக்க ஒரு ஏக்க ருக்கு 7 பேர், நடவுக்கு 20 பேர் தேவை. விதை மற்றும் ஆட்கள் கூலி செலவு 3 ஆயிரத்து 800 ரூபாய் ஆகும். இயந்திரம் மூலம் பாய் நாற்றங்கால் விடும் முறையில் ஒரு ஏக்கருக்கு 15 கிலோ விதைக்கு 300 ரூபாய், நாற்று விடவும், நாற்று பறித்து நெல் வயலில் நடவும் இயந்திர வாடகை 2500 ரூபாய் என மொத்தமே 2 ஆயிரத்து 800 ரூபாய் செலவாகிறது. இது சாதாரண முறையை விட ஆயிரம் ரூபாய் குறை வாகிறது. இதன்காரணமாக நாற்றங்கால் விடுதலில் இயந்திர முறையை பயன்படுத்துவது அதிகரித்து வருகிறது.

**தோட்டக்கலைத் துறை பணிமனைக் கூட்டம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 03,2010,02:42 IST

உளுந்தூர்பேட்டை : திருநாவலூர் தேசிய தோட்டக்கலை இயக்கம் சார்பில் வட்டார பணிமனைக் கூட்டம் நடந்தது.உளுந்தூர்பேட்டை நகர் வனவிரிவாக்க மையத்தில் நடந்த நிகழ்ச்சிக்கு தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் பன்னீர் செல் வம் தலைமை தாங்கினார். திருநாவலூர் தோட் டக்கலை உதவி இயக்குனர் சுமதி முன்னிலை வகித்தார்.இதில் தேசிய தோட் டக்கலை இயக்கம், தேசிய மூங்கில் இயக்கம், நீர்வள நிலவள திட்டம் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப் பட்டது. மேலும் வன விரிவாக்க அலுவலர் சுந்தரமூர்த்தி, திருநாவலூர் வேளாண்மை அலுவலர் மூங்கில் மற்றும் வேளாண்மை துறை திட் டங்கள் குறித்து பயிற்சி அளித்தனர். உதவி வேளாண்மை அலுவலர்கள் சுப்ரமணியன், மணி, ஜோதிராமலிங் கம், அருள்செல்வன் உடனிருந்தனர்.

**பயிர்களுக்கு இன்சூரன்ஸ்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 03,2010,01:25 IST

வடமதுரை:வடமதுரை வட்டாரத்தில் இவ்வாண்டு பயிர் காப்பீட்டு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. வடமதுரை, அய்யலூர் பிர்க்காக்களில் ராபி பருவத்தில் சாகுபடி செய்யப்படும் நெல், சிறுதானியம், எண்ணெய்வித்து மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கு இன்சூரன்ஸ் திட்டம் செயல்படுத்த அரசு உத்தரவு வழங்கியுள்ளது. கடன் பெற்ற, பெறாத என இரு வகை விவசாயிகளும் பங்கு பெறலாம். தங்களது சாகுபடி பயிர்களுக்கு ஏற்றவாறு அருகிலுள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் கட்டணம் செலுத்த வேண்டும். இதில் பிரிமியத்தில் பெரும்பகுதி அரசு மானியமாகவும் செலுத்துகிறது. விவசாயிகள் வாய்ப்பை பயன்படுத்தி பலன்பெறும்படி வேளாண்மை உதவி இயக்குனர் பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

**மழையால் பயிர்கள் அழியும் அபாயம்:விவசாயிகள் கலக்கம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 03,2010,02:56 IST

திருப்புத்தூர்:தொடர் மழையால் திருப்புத்தூரில் நெற்பயிர்கள் அழுகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இங்குள்ள 191 ஒன்றிய கண்மாய்களில் ஏழு தவிர மற்றவை, நிரம்பி விட்டன; 47 பொதுப்பணித்துறை கண்மாய்களில், 15 ல் தண்ணீர் மறுகால் பாய்கிறது. மற்ற கண்மாய்களும் முழு அளவை சில நாட்களில் எட்டிவிடும். பாலாற்றில் இருந்து நீர் வரத்து அதிகரித்து திருப்புத்தூர் பெரிய கண்மாய் நிரம்பியுள்ளது. பொதுப்பணித்துறையினர் மணல் மூடைகளுடன் விழிப்பாக இருக்க

அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.ஆண்டு சராசரியான 861 மி.மீ., என்ற அளவை விட, 120 மி.மீ., அதிகமாக மழை பெய்துள்ளது.

மழை தொடரும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது. இங்கு 15 ஆயிரம் ஏக்கரில் நெற்பயிர் பயிரிடப்பட்டுள்ளது. பெரும்பாலான நிலம் நீரில் முழ்கியுள்ளது. மேலும் சில நாட்கள் மழை பெய்தால், பயிர்கள் அழுகும் என விவசாயிகள் அச்சத்தில் உள்ளனர். மழை நின்றாலும் கண்மாய்கள் நிறைந்துள்ளதால், அபாயத்திலிருந்து தப்புவது கடினம்.சேதம்: மழையால் திருப்புத்தூரில் 20 வீட்டு சுவர்கள் இடிந்துள்ளன. திருக்கோஷ்டியூரில் ஐந்து, வாராப்பூரில் மூன்று வீடுகள் சேதமடைந்துள்ளன. வருவாய், வளர்ச்சி துறையினர் மழை பாதிப்பு குறித்து ஆய்வு நடத்தி வருகின்றனர்.

**விதை, வெங்காயம் விலை தொடர் மழையால் உயர்வு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 03,2010,02:22 IST

ஸ்ரீவில்லிபுத்தூர்:தொடர் மழையால் விதை வெங்காயம் விலை அதிகரித்துள்ளது.மாவட்டம் முழுவதும் நடவு பணி துவங்கியதால் விதை வெங்காயம் கிடைப்பதில் தட்டுப்பாடு நிலவுகிறது.

விவசாயி மாரிமுத்து கூறியதாவது:கடந்த ஓராண்டாக ஸ்ரீவி.,யில் மழை இல்லாததால் குறைவான விவசாயிகளே வெங்காயம் விவசாயம் செய்தனர். வெங்காயத்தை இருப்பு வைத்து தற்போது கொச்சி, புனலூர், கோட்டயம் ஆகிய ஊர்களுக்கு அதிக விலைக்கு விற்கின்றனர்.இதனால் தற்போது நடவு செய்ய வெங்காயம் கிடைக்காமல் திண்டுக்கல்லில் இருந்து வாங்கி வருகிறோம். கடந்த மாதம் வரை 20 ரூபாய்க்கு விற்ற கிலோ விதை வெங்காயம், தொடர் மழையால் தற்போது 32 ரூபாயாக உயர்ந்துள்ளது, என்றார்.

**மழையால் வெங்காய விவசாயிகள் கண்ணீர்: தண்ணீர் தேங்கி அழுகும் பயிர்கள்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 03,2010,03:19 IST

செக்கானூரணி: செக்கானூரணி பகுதியில் தொடர் மழை காரணமாக தக்காளி, வெங்காயம், பூச்செடிகள் செடியிலேயே அழுகி சேதம் அடைந்தன. செக்கானூரணி பகுதியில் ஆ.கொக்குளம், கே.பி.ஒத்தப்பட்டி, கே.பாறைப்பட்டி, சிக்கம்பட்டி, சொரிக்காம்பட்டி, கிண்ணிமங்கலம், தேன்கல்பட்டி, கே.புளியங்குளம் பகுதியில் கிணற்று பாசனம் மூலம் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலத்தில் தக்காளி, கத்தரி, வெண்டை, வெங்காயம் போன்ற காய்கறிகள் பயிரிடப்பட்டுள்ளன. வெங்காயம் அறுவடைக்கு தயாராக உள்ளது. இந்நிலையில் தொடர் மழை காரணமாக நிலங்களில் தண்ணீர்

தேங்கியுள்ளது. இவற்றை வடித்து விட முடியாமல் விவசாயிகள் சிரமப்படுகின்றனர். இதன் காரணமாக வெங்காய செடி அழுகியுள்ளது. தக்காளி செடிகள் கருகிவிட்டன. கோழிக்கொண்டை, சம்பங்கி பூச்செடிகளும் சேதமடைந்துள்ளன. ஒத்தப்பட்டியை சேர்ந்த விவசாயிகள் அபிமன்னன், மூக்கையா கூறுகையில், ""வெங்காயத்தில் மகசூலை அறுவடை செய்ய வேண்டிய நேரத்தில் சேதம் ஏற்பட்டுள்ளது. தக்காளி, பூச்செடிகளிலும் முழுமையான மகசூல் கிடைக்காது. செலவு செய்த பணத்தை கூட மீட்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது" என்றனர்.

**1,000 ஏக்கர் வெங்காய பயிர் சேதம் : நிவாரணம் வழங்க கோரிக்கை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 03,2010,01:12 IST

பெரம்பலூர்: "பெரம்பலூர் மாவட்டத்தில், தொடர்ந்து பெய்து வரும் மழையால் நக்கசேலம் கிராமத்தில் 1,000 ஏக்கரில் பயிரிடப்பட்ட சிறிய வெங்காயம் பயிர் சேதம் ஏற்பட்டுள்ளதுக்கு, நிவாரணம் வழங்கவேண்டும்,'என அப்பகுதி விவசாயிகள் மாவட்ட கலெக்டரிர் விஜயகுமாரிடம் மனு கொடுத்தனர்.

அம்மனுவில் தெரிவித்துள்ளதாவது: பெரம்பலூர் மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழையால் ஆலத்தூர் யூனியன் நக்கசேலம் கிராமத்தில் 1,000 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள சிறிய வெங்காய பயிர் சேதமடைந்துள்ளது. இதனால் விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. எனவே மழையால் சேதமடைந்துள்ள சிறிய வெங்காயத்திற்கு அரசு நிவராணமாக ஏக்கருக்கு பத்தாயிரம் ரூபாய் வழங்கவேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுவை பெற்றுக்கொண்ட கலெக்டர் விரைந்து நிவாரணம் அளிக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

**அசத்தும் "அடுப்பங்கரை தோட்டம்'**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 03,2010,00:00 IST



மதுரை: வீட்டுக்கு வெளியே உள்ள, சிறிய இடங்களிலும் வீட்டிற்கு பயன்படும் வகையில், மனதிற்கு இதம் தரும் சிறிய அடுப்பங்கரை தோட்டம் அமைக்கலாம். "அடுப்பங்கரை தோட்டங்களில் தக்காளி, வெண்டை, புடலை, பீர்க்கை, பாகல், கீரை செடிகளை வளர்க்கலாம். ஒரு செடி வைத்தால் போதும், வீட்டிற்கு தேவையான அளவு காய்கள், கீரைகள் கிடைக்கும். சீசன் முடிந்த பின், அதே செடிகளை மீண்டும் நடக்கூடாது. தக்காளி வைத்த இடத்தில் வெண்டை, புடலை வைத்த இடத்தில் தக்காளி என மாற்றி நட வேண்டும்.இதனால் நோய் தாக்குதல் குறையும். அதேபோல், பழம் தரும் சப்போட்டா, கொய்யா, எலுமிச்சை, பப்பாளி, வாழை போன்றவற்றை நடலாம். அந்தந்த சீசனுக்கு தகுந்தாற்போல் பழங்கள் கிடைக்கும்,' என்கிறார் **மதுரை விவசாயக் கல்லூரி தோட்டக்கலை பேராசிரியர் பிரேமலட்சுமி.**

**நிரம்பியது "வரதமாநதி அணை'**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 03,2010,00:00 IST



திண்டுக்கல்: பழநியில் உள்ளது வரதமாநதி அணை. இதன் உயரம் 65 அடி. இந்த அணையில் இருந்து கிடைக்கும் நீரை பயன்படுத்தி, 6,500 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. வறட்சி ஆண்டுகளில் வரதமாநதி வறண்டே காணப்படும். இந்நிலையில், கடந்த அக்டோபர் மாதத்தில் அதிக மழை பெய்ததால் வரதமாநதி அணை நிரம்பி தொடர்ந்து 10 நாட்கள் மறுகால் சென்றது. இந்த ஆண்டும், கொடைக்கானல் மலைப்பகுதியில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக, பழநியில் உள்ள பாலாறு பொருந்தலாறு, வரதமாநதி, குதிரையாறு மூலமாக அதிக நீர் வரத்து உள்ளது. இதனால் இந்த வரதமாநதி அணை இரண்டாவது முறையாக நிரம்பியுள்ளது. இதையடுத்து, அணையில் இருந்து பாசன கண்மாய்களுக்கு நீர் திறந்து விடப்பட்டுள்ளது. வரதமாநதி அணை முழுவதும் நீர் நிரம்பி இருப்பது கண்கொள்ளாக்காட்சியாக உள்ளது.

**ஏற்றுமதியாகும் திருப்பூர் "மஞ்சி'**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 03,2010,00:00 IST



திருப்பூர்: தென்னை சாகுபடியில், மாநில அளவில் இரண்டாமிடம் வகிக்கிறது திருப்பூர் மாவட்டம். இங்கு 65 லட்சம் தென்னை மரங்கள் உள்ளன. இதனால், தேங்காய் மட்டையில் இருந்து நார் பிரித்தெடுக்கும் தொழிற்சாலைகள் பொள்ளாச்சி மற்றும் உடுமலைப்பேட்டையில் உள்ளன. மட்டையை தண்ணீரில் ஊற வைத்து, இயந்திரம் மூலம் நாராக பிரித்து, இயந்திரங்களால் கயிறாக திரிக்கப்படுகிறது. இந்த தொழிற்சாலைகளில் புதிய தொழில்நுட்பங்கள் புகுத்தப்பட்டன. இங்கு தயாரிக்கப்படும் வெள்ளை மற்றும் பழுப்பு "மஞ்சி' வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் வாய்ப்பு ஏற்பட்டது. மத்திய அரசின் கயிறு வாரியம் மூலம் பல்வேறு மானியங்கள், நிலையான விலை கிடைத்தது. ரஷ்யா, சீனா போன்ற வெளிநாடுகளில் சொட்டு நீர் பாசனம், கட்டுமானம் போன்றவற்றிற்கு பெருமளவில் தேவைப்படுகிறது. முதல் தர "மஞ்சி' ரஷ்யாவிற்கும், இரண்டாம் தர "மஞ்சி' சீனாவிற்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

**நாற்றங்கால் உற்பத்தியிலும் இயந்திரங்களை பயன்படுத்துவது அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 03,2010,00:00 IST



செங்கல்பட்டு : ஆட்கள் பற்றாக்குறையால், விவசாயிகள் இயந்திரங்களை பயன்படுத்துவது அதிகரித்து வருகிறது. நாட்டின் முதுகெலும்பாக திகழ்வது விவசாயம். ஆனால் இன்று விவசாயம் மிகவும் நலிவடைந்து வருகிறது. எந்தப் பொருளையும் உற்பத்தி செய் பவர் அதற்குரிய விலையை நிர்ணயிக்கிறார். ஆனால், விவசாயி மட்டும் தான் விளைவித்த பொருளுக்கு விலை நிர்ணயம் செய்ய முடியாத நிலை உள்ளது. அரும் பாடுபட்டு உணவுப் பொருட் களை உற்பத்தி செய்யும் விவ சாயிக்கு கிடைக்கும் லாபத்தை விட அதை வாங்கி விற்கும் வியா பாரிகளும், இடைத்தரகர்களும் அதிக லாபம் பெறுகின்றனர். போதிய லாபம் இல்லாதது, வறட்சி, ஆள் பற்றாக்குறை உட்பட பல்வேறு காரணங் களால் விவசாயிகள் விவசாயம் செய்வதை விட்டுவிட்டு வேறு வேலைகளுக்கு செல்ல துவங்கி யுள்ளனர். நிலத்தின் மதிப்பு அதிகரித் துள்ளதால், விவசாய நிலங்கள் வீட்டு மனைகளாக மாறத் துவங்கியுள்ளன. இதனால், விவசாய நிலங்களின் பரப்பு வேகமாக குறைந்து வருகிறது. விவசாயத்தை மட்டும் நம்பி யுள்ள விவசாயிகள் தொடர்ந்து விவசாயம் செய்கின்றனர். அவர் களும் வேலைக்கு ஆள் கிடைக் காமல் அவதிப்படுகின்றனர். இதனால், விவசாயத்தில் இயந்திரங்களைப் பயன்படுத்துவது அதிகரித்து வருகிறது. ஏரிகள் மாவட்டமான காஞ்சிபுரம் மாவட்டத்தில் முன், பல ஆயிரம் எக்டர் நிலப்பரப்பில் விவசாயம் நடந்தது. தற்போது தொழிற்சாலைகள் பெருக்கம் காரணமாக விவ சாயம் குறைந்து விட்டது. விவசாய வேலை செய்தவர்கள் தனியார் தொழிற்சாலைகளில் வேலைக்கு செல்கின்றனர். வேலை உறுதி திட்டம் அனைத்து ஊராட்சிகளிலும் செயல்படுத்தப்படுவதால் விவசாய வேலைக்கு ஆட்கள் கிடைப்பதில்லை. எனவே, விவசாயிகள் இயந்திரங்களை பயன்படுத்த

துவங்கியுள்ளனர். முன்பு நாற்று நடவு, களை பறித்தல், அறுவடை போன்ற வற்றுக்கு இயந்திரங்களைப் பயன்படுத்தினர். தற்போது, நாற்றங்கால் உற்பத்திக்கும் இயந்திரம் பயன்படுத்துகின் றனர். இயந்திரத்தை பயன்படுத்தி நாற்றங்கால் உற்பத்தி செய்யும் முறை பாய் நாற்றங்கால் முறை என அழைக்கப்படுகிறது. பொதுவாக பாய்நாற்றங்கால் முறையில் நிலத்தில் அரை அடிஉயரத்திற்கு மண் பரப்பி பாத்திபோல் கட்டுவர். அதன் மீது பிளாஸ்டிக் பேப்பர்களை விரித்து உரம் கலந்த மண் கொட்டி விதை விதைப்பர். இம்முறையில் தண்ணீர் குறை வாக செலவானாலும் ஆட்கள் தேவை. இதை நிவர்த்தி செய்ய தற்போது இயந்திரம் மூலம் பாய்நாற்றங்கால் விடும் முறை அறிமுகமாகியுள்ளது. இயந்திர பாய்நாற்றங்கால் முறையில் விவசாயிகள் ஆட் களை தேடத் தேவையில்லை. இயந்திரம் வாடகை விடுபவர் களிடம் ஏக்கருக்கு 2500 ரூபாய் வாடகை செலுத்தினால் போதும். அவர்களே வந்து இயந்திரத்தின் மூலம் அதற்கென உள்ள தட்டு களில் மண் மற்றும் விதைகளை பரப்பி நாற்றுவிடுவர். 15ம் நாளில் நாற்று வளர்ந்து விடும். அவர்களே நாற்றை பறித்து இயந்திரம் மூலம் நடவு செய்து தருவர். சாதாரண முறையில் விவ சாயம் செய்தால் ஒரு ஏக்கருக்கு 25 கிலோ நெல் விதை தேவை. நாற்றங்கால் தயாரானதும் நாற்றங்கால் பறிக்க ஒரு ஏக்க ருக்கு 7 பேர், நடவுக்கு 20 பேர் தேவை. விதை மற்றும் ஆட்கள் கூலி செலவு 3 ஆயிரத்து 800 ரூபாய் ஆகும். இயந்திரம் மூலம் பாய் நாற்றங்கால் விடும் முறையில் ஒரு ஏக்கருக்கு 15 கிலோ விதைக்கு 300 ரூபாய், நாற்று விடவும், நாற்று பறித்து நெல் வயலில் நடவும் இயந்திர வாடகை 2500 ரூபாய் என மொத்தமே 2 ஆயிரத்து 800 ரூபாய் செலவாகிறது. இது சாதாரண முறையை விட ஆயிரம் ரூபாய் குறை வாகிறது. இதன்காரணமாக நாற்றங்கால் விடுதலில் இயந்திர முறையை பயன்படுத்துவது அதிகரித்து வருகிறது.

**மேய்ச்சல் நிலமான "விளைநிலங்கள்'**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 03,2010,00:00 IST



சேலம்: பனைமரத்துப்பட்டி சுற்று வட்டராப் பகுதிகளில், விளை நிலங்கள் அதிகம். விவசாயமே பிரதான தொழிலாக உள்ளது. சமீபகாலமாக இங்குள்ள விளை நிலங்கள் கால்நடைகளின் மேய்ச்சல்

நிலங்களாக மாறி வருகின்றன. "கூலி ஆட்கள் பற்றாக்குறை, பயிர்களை நோய் தாக்குதல் போன்றவைகளாலும், ஆண்டுக்கு 10 ஆயிரம் ரூபாய் மட்டுமே ஏக்கருக்கு லாபம் கிடைப்பதாலும், இங்குள்ள விளைநிலங்கள், மேய்ச்சல் நிலங்களாக மாறிவிட்டன. இவற்றில், ஆடுகள் மேயவிடப்படுகின்றன. ஐந்து கிலோ எடை கொண்ட ஒரு செம்மறி ஆட்டுக்குட்டியை ஆயிரம் ரூபாய்க்கு வாங்கி, மேய்த்தால் பத்து மாதத்தில் 25 முதல் 30 கிலோ எடை கொண்ட ஆடுகளாக அவை வளர்கின்றன. செலவு போக, ஒரு ஆட்டுக்கு 2,000 ரூபாய் வீதம் 50 ஆடுகளுக்கு, ஆண்டுக்கு ஒரு லட்ச ரூபாய் லாபம் கிடைக்கிறது. எனவே, விவசாயிகளில் பெரும்பாலானோர் தற்போது தங்களின் விளைநிலங்களை மேய்ச்சல் நிலங்களாக மாற்றி வருகின்றனர்.

**களைகட்டும் "சைனீஸ் கேப்பேஜ்' சாகுபடி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 03,2010,00:00 IST



நீலகிரி: பிரசித்தி பெற்ற மலைவாச தலமான ஊட்டியைச் சுற்றியுள்ள, பல கிராமங்களில் காய்கறி சாகுபடி பிரபலமாக உள்ளது. தேயிலை, காபி தோட்டங்கள் ஏராளமாக இருந்தாலும், கேரட், பீட்ரூட், கோஸ் என பல வகை காய்கறிகளும் இங்கு விளைவிக்கப்பட்டு, நாட்டின் மற்ற பகுதிகளுக்கு அனுப்பப்படுகின்றன. நல்ல சீதோஷ்ண நிலையில் வளருவதால், இக்காய்கறிகளுக்கு பெரும் வரவேற்பு உள்ளது. ஊட்டி அருகே உள்ள தொரையட்டி கிராமத்தில் **"சைனீஸ் கேப்பேஜ்'** எனப்படும் கோஸ்களை விளைவிப்பதில் இப்பகுதி விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றன. நோய் தாக்குதல், பராமரிப்பு செலவு ஆகியவை குறைவு என்பதால் "சைனீஸ் கேப்பேஜ்ஜை' பயிரிடுவது அதிகமாக உள்ளது. மற்ற காய்கறிகளைப் போலவே இதுவும் இங்கிருந்து பல்வேறு இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது

**தொடர் மழையால் உச்சத்தில் காய்கறி விலை : "மல்லி' வரத்தால் பிற "பூ'க்கள் வீழ்ச்சி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 03,2010,01:35 IST

திருச்சி: திருச்சியில் தொடர் மழை காரணமாக காய்கறி விலை தொடர்ந்து உச்சத்துக்கு சென்றது. மல்லிகை பூ வரத்து அதிகரித்துள்ளதால் பிற பூக்களுக்கு போதிய விலை கிடைக்காமல் விவசாயிகள் நஷ்டமடைந்துள்ளனர்.

தமிழகம் முழுவதும் பரவலாக பலத்த மழை பெய்து வருகிறது. பல பகுதிகளில் விவசாய நிலங்கள் நீரில் மூழ்கி உள்ளன. இதனால், காய்கறி விலை கடுமையாக உயர்ந்துள்ளது. ஒரு வாரத்துக்கு முன் அதிகபட்சமாக 15 ரூபாய்க்கு விற்ற நாட்டு காய்கறிகள் தற்போது இரண்டரை மடங்கு அதிகரித்துள்ளது.

திருச்சியில் நேற்றை நிலவரப்படி காய்கறி விலை நிலவரம் (கிலோவில்): தக்காளி 14 ரூபாய், கத்தரிகாய் 44, 30, அவரைகாய் 50, 40, வெண்டை 22, 20, கொத்தவரங்காய் 16, புடலங்காய் 24, 20, பீர்க்கங்காய் 24, 18, பாவற்காய் 24, முருங்கை 44, 34, முள்ளங்கி 18, தட்டக்காய் 16, மாங்காய் 30, 24, பரங்கி, பூசணி 6, சுரை 8, பச்சமிளகாய் 18, இஞ்சி 32, கருணை 22.

சேனை 25, சேப்பை 20, சின்னவெங்காயம் 20, 16, பெரியவெங்காயம் 34, 30, உருளை 22, கேரட் 28, பீன்ஸ் 32, கோஸ் 16, 14, சவ்சவ் 12, பீட்ரூட் 14, காளி 16, 14, 12, 10 ரூபாய் என விற்கப்பட்டது. கொத்தமல்லி கட்டு 17, புதினா 10, கருவபிள்ளை 18 ரூபாய் என விற்றது. தவிர, பூண்டு 200, 140, காளான் 145 ரூபாய்க்கு விற்றது. பனிபொழிய வேண்டிய கார்த்திகை மாதம் மழை தொடர்வதால் மல்லி விளைச்சல் அமோகமாக உள்ளது. இதனால், பிற பூக்களின் விற்பனை "டல்' அடித்துள்ளது.

பூக்களின் விலை நிலவரம் (கிலோவில்): மல்லி 150, 140 ரூபாய், ஜாதி 200, முல்லை 250, விச்சி 60. 70, 50, கனகாம்பரம் 500, கோழிகொண்டை 40, சம்மங்கி 70, 100, செவந்தி 40, 50, காட்டுமல்லி 150, கேந்தி 30, பட்ரோஸ் 40, மாசிபச்சை மூன்று ரூபாய்க்கு விற்றது.

காந்தி மார்க்கெட் பூ வியாபாரி சொக்கலிங்கம் கூறுகையில், ""கார்த்திகை மாதம் பனிப்பொழிவு ஏற்படும். இதனால், மல்லி செடியில் பூ வைக்காது. இதனால், பிற பூக்களான காட்டுமல்லி, கனகாம்பரம் போன்ற பூக்களுக்கு நல்ல விலை கிடைக்கும். தவிர, விவசாயிகளும் சீதோசன நிலையை மனதில் வைத்து தான் பூ செடிகளை நட்டு வைத்திருப்பர். ஆனால், பருவநிலை மாற்றத்தால் அனைத்தும் தலைகீழாக உள்ளது. மல்லி பூ வரத்து அதிகளவு உள்ளதால், பிற பூக்களுக்கு போதிய விலை கிடைப்பதில்லை,'' என்றார்.

**முட்டை விலை வரலாறு காணாத சரிவு : ஒரு வாரத்தில் 47 காசு குறைப்பு : கோழிப்பண்ணையாளர் கலக்கம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 03,2010,03:46 IST

நாமக்கல்: தமிழகம், கேரளாவில் முட்டை விலை 235 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டை விலையில் ஏற்பட்டுள்ள தொடர் சரிவு பண்ணையாளர்கள் மத்தியில் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.
நாமக்கல்லில் தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து பண்ணையாளர்கள் விவாதித்தனர். 252 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை 17 காசுகள் குறைத்து 235 காசாக நிர்ணயிக்கப்பட்டது.
நவம்பர் இறுதி முதல் முட்டை விலை இறங்கு முகமாக உள்ளது. அதன்படி 282 காசு இருந்த முட்டை கடந்த 27ம் தேதி 15 காசு குறைத்து 267 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. அதையடுத்து 29ம் தேதி மீண்டும் 15 காசு குறைத்து 252 காசுகளாகவும், நேற்று 17 காசு குறைத்து 235 காசாகவும் நிர்ணயிக்கப்பட்டது.
ஐயப்பன் கோவில் சீஸன் காரணமாக ஒரு வாரத்துக்குள் முட்டை விலை வரலாறு காணாத அளவில் 47 காசு குறைக்கப்பட்டிருப்பது பண்ணையாளர்கள் மத்தியில் பெரும் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.
நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை விவரம்: ஹைதராபாத் 242 காசுகள், விஜயவாடா, தனுகு 240 காசுகள், சென்னை 255, காசுகள், மைசூர் 240 காசுகள், பெங்களூர் 240 காசுகள், மும்பை 267 காசுகள், டில்லி 270 காசுகள், பர்வாலா 252 காசுகள், கோல்கத்தா 267 காசுகள்.
நாமக்கல்லில் நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முட்டைக் கோழி விலை குறைத்து 32 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை 2 ரூபாய் குறைத்து 37 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது.

**ஒரு கிலோ கத்தரிக்காய் ரூ.55; முருங்கை ரூ.60**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 02,2010,03:30 IST

திருப்பூர்:தொடர் மழை காரணமாக, கத்தரி செடியில் பூக்கள் உதிர்வதால் வரத்து குறைந்துள்ளது. முருங்கை சீசன் முடிந்து விட்டதால் விலை அதிகரித்துள்ளது. திருப்பூர் உழவர் சந்தையில் ஒரு கிலோ முருங்கை 60, கத்தரி 55 ரூபாய்க்கு விற்கிறது.சபரிமலை சீசன் துவங்கியுள்ளதால், கேரளாவுக்கு செல்லும் முட்டை அளவு குறைந்துள்ளது. முட்டை விற்பனையில் ஏற்பட்ட தேக்கம் காரணமாக, விற் பனையை அதிகரிக்க, விலை குறைக்கப்பட்டுள்ளது. கடந்த நான்கு நாட்களில் முட்டை ஒன்றுக்கு 30 காசு குறைந்துள்ளது. கொள்முதல் விலையில் 2.52 ரூபாய்; மொத்த விற்பனை 2.55; சில்லரையில் 2.75 ரூபாய்க்கு விற்கிறது. வரும் நாட்கள் குளிர் காலம் என்பதால், நல்ல விற்பனை இருக்குமென எதிர்

பார்க்கப்படுகிறது.கத்தரி, முருங்கை விலைகிடுகிடு: காய்கறி விலை விபரம் குறித்து, வடக்கு உழவர் சந்தை அலுவலர் ராமலிங்கம்கூறியதாவது:கத்தரி வரத்து, மூன்று டன்னில் இருந்து 1.1 டன் என குறைந்துள்ளது; சின்ன வெங்காயம் 3.25 டன்னில் இருந்து இரண்டு டன்னாக குறைந்துள்ளது. முருங்கை 200 கிலோ மட்டும் வருகிறது. அய்யப்பன் கோவிலுக்குச் செல்வோர் அதிகம் உள்ளனர்.சைவ சமையலில் சாம்பாருக்கு முருங்கை மற்றும் கத்தரி அதிகளவு பயன்படுத்தப்படும். முருங்கை வரத்து மிக குறைவாக உள்ளதால், கத்தரிக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது. புதிய வெங்காயம், மழையால் அழுகி விடுகிறது. பட்டறையில் உள்ள பழைய வெங்காயம் வருவதால் நல்ல விற்பனை நடக்கிறது. வரும் நாளில் தொடர்ந்து விலை உயரும் வாய்ப்புள்ளது.பச்சை மிளகாய் 40 ரூபாயில் இருந்து 25 ரூபாயாக இறங்கியது.

மழையால் விளைநிலத்தில் பறித்தல் தடையாவதால், விலை உயர்கிறது. மழை நீடித்தால் விலை அதிகரிக்கும். ஒரு கிலோ கத்தரி 55 ரூபாய்; வெண்டை 16; தக்காளி 14; அவரை 34; புடலை 22; பீர்க்கன் 30; சுரைக்காய் 6; பாகல் 20; கொத்தவரை 16; பூசணி 6; அரசாணி 8; பச்சை மிளகாய் சம்பா 16, உருண்டை 25; சின்ன வெங்காயம் 26.பெரிய வெங்காயம் (இரண்டாம் தரம்) 25; முருங்கை 60; தேங்காய் 4 ரூபாய் உயர்ந்து 18; சேனைக்கிழங்கு 25; உருளை 24; மேரக்காய் 14; கேரட் 35; கொத்தவரை 24; கோஸ் 16; பீன்ஸ் 35; கறிவேப்பிலை 20; கொத்தமல்லி 24; கீரை வகை 15; எலுமிச்சை 50; வாழை பழம் 20; செவ்வாழை 24; வாழைக்காய் 18 ரூபாய்க்கு விற்பனையாகிறது.இவ்வாறு, ராமலிங்கம் கூறினார்.சமையல் எண்ணெய் விலை உயரும்: திருப்பூர் சமையல் எண்ணெய் வியாபாரிகள் சங்க தலைவர் சந்திரன் கூறுகையில், ""தொடர் மழை காரணமாக, எண்ணெய் வித்துகளை வெயிலில் உலர்த்தும் பணி தடைபடுகிறது. எண்ணெய் உற்பத்தி பாதிக்கப்பட்டு, வரத்து குறைகிறது.வரும் நாட்களில் விலை உயரும் வாய்ப்புள்ளது. கடந்த வார விலையே தொடர்ந்தாலும், ஓரிரு நாளில் விலை மாற்றம் ஏற்படும். ஒரு கிலோ ரீபன்ட் ஆயில் 100 ரூபாய்; விளக் கெண்ணெய் 100; தேங்காய் எண்ணெய் 90; நல்லெண்ணெய் 90; கடலை எண்ணெய் 88; சூரியகாந்தி எண்ணெய் 83; பாமாயில் 58; நெய் 280 ரூபாய்க்கு விற்கிறது,'' என்றார்.

பருப்பு விற்பனை வீழ்ச்சி: திருப்பூர் மார்க்கெட் வியாபாரிகள் சங்க தலைவர் பாலசுப்ரமணியம் கூறுகையில்,""மழை காரணமாக 50 சதவீதத்துக்கு அதிகமாக விற்பனை பாதிக்கப் பட்டுள்ளது. பாசிப்பருப்பு ஒரு கிலோ 62; பாசிப்பயறு 57; துவரம் பருப்பு 48 முதல் 52 வரை; கருப்பு உளுந்து 58; உருட்டு உளுந்து 76; தட்டைபயறு 32 முதல் 34 வரை; கொள்ளு 22; அஸ்கா கிலோ 31 ரூபாய்க்கு விற்கிறது,'' என்றார்.பூ விற்பனை பாதிப்பு: பூ வியாபாரிகள் சங்க செயலாளர் சக்திவேல் கூறுகையில், ""அடை மழை நீடிப்பதால், பூ விளைச்சல் மற்றும் விற்பனை பாதித் துள்ளது. சில்லரை விற்பனை குறைந்து, மொத்த விற்பனை மட்டும் நடக்கிறது. கனகாம்பரம் வரத்தில்லை.பனி மற்றும் மழை காரண மாக, அரளி வரத்து குறைந்தது. ஒரு கிலோ அரளி 280 ரூபாய்; மல்லிகை 160; முல்லை, ஜாதிமுல்லை

160; சம்பங்கி 70, 80; செவ்வந்தி 70; மாலை சிறியது 30, பெரியது 120 ரூபாய் வரை விற்கிறது," என்றார்.

## உள்நாட்டில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் பஞ்சு மற்றும் நூல் ஏற்றுமதிக்கு தடை விதிக்க வேண்டும் பிரதமருக்கு, கருணாநிதி கடிதம்

*சென்னை, டிச.3–*

*பஞ்சு மற்றும் நூல் ஏற்றுமதியால் உள்நாட்டில் கடுமையாக தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எனவே, பஞ்சு மற்றும் நூல் ஆகியவற்றை ஏற்றுமதி செய்வதை தடுத்து நிறுத்த வேண்டும் என்று கூறி, பிரதமர் மன்மோகன் சிங்குக்கு, முதல்–அமைச்சர் கருணாநிதி கடிதம் எழுதியுள்ளார்.*

*இது தொடர்பாக பிரதமர் மன்மோகன் சிங்குக்கு தமிழக முதல்–அமைச்சர் கருணாநிதி நேற்று எழுதியுள்ள கடிதத்தில் கூறி இருப்பதாவது:–*

*20 சதவீதம் விலை அதிகரிப்பு*

*நாட்டில் உற்பத்தியாகும் பஞ்சினை (பருத்தி) உள்நாட்டு தேவைக்கு முழுமையாக பயன்படுத்தியது போக மீதம் இருந்தால் மட்டுமே வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தி கடந்த 23–9–2010–ல் தங்களுக்கு நான் எழுதிருந்த கடிதம் தொடர்பாக உங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். கடந்த நவம்பர் 1–ந் தேதி, 55 லட்சம் பஞ்சு பொதிகளை (பேல்) வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதனால் பஞ்சு விலை கடந்த 2 மாதங்களில் அதிகரித்துக் கொண்டே வருகிறது.*

*செப்டம்பர் மாதம் முதல் நவம்பர் கடைசி மாதத்துக்கு இடைப்பட்ட காலத்தில் பஞ்சு விலை சுமார் 20 சதவீதம் அதிகரித்துள்ளது. வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்காக ஏற்றுமதியாளர்கள், பருத்தியை வாங்கி குவித்து வருவதால் வருத்தப்படும் வகையில், நமது உள்நாட்டுத் தேவைக்கு போதுமான பஞ்சு இல்லை. வழக்கமாக, அக்டோபருக்கு பிறகு வரும் 4–5 மாதங்களில் பருத்தியின் விலை குறைவாகவே இருக்கும். ஆனால், 55 லட்சம் பஞ்சுப் பொதிகளை ஏற்றுமதி செய்ய அனுமதித்திருப்பதால், நம் நாட்டுக்குத் தேவையான*

பஞ்சு இருப்பினை அதிகரித்துக் கொள்ள நம்மிடம் பஞ்சு இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஏற்றுமதிக்கு தடை

இந்தியா, பஞ்சு ஏற்றுமதி செய்வதால் பலனடையக்கூடிய நமது போட்டியாளரான சீனா, உள்நாட்டு உற்பத்திக்காக 33 சதவீத கையிருப்பினை வைத்திருக்கும் நிலையில் நாம் 17 சதவீதத்தை மட்டுமே வைத்திருக்கிறோம். பருத்தியை விளைநிலத்தில் இருந்து பறிக்கும் சீசன் ஜனவரி வரை நீடிக்கும். எனவே, இந்த வேளையில் நாம் நமது பஞ்சு இருப்பினை அவசரகதியில் பெருக்கிக் கொள்ள வேண்டும். இதன் மூலம், விவசாயத்துக்கு அடுத்த படியாக, நாட்டில் வேலைவாய்ப்பை அதிக அளவில் வழங்கும் 2–வது துறையான ஜவுளித்துறைக்கு தேவையான மூலப்பொருள் தொடர்ந்து கிடைக்க வழிவகை செய்ய வேண்டும்.

தமிழகத்தில் மட்டுமே கைத்தறி மற்றும் விசைத்தறிகள் மூலம் 50 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்து வருகிறது. இந்த எண்ணிக்கை, ஒட்டு மொத்த இந்தியாவுக்கு கணக்கெடுத்துப் பார்த்தால் பன்மடங்கு அதிகரிக்கும். எனவே, நமது ஜவுளித்துறைக்குத் தேவையான பஞ்சு கிடைக்கும் வரையிலும், உள்நாட்டு தேவைக்கு ஏற்ப பஞ்சு இருப்பு நமக்கு கிடைக்கும் வரையிலும், அதன் மூலம் பருத்தியின் விலை குறையும் வரையிலும், பஞ்சு ஏற்றுமதியை நிறுத்தி வைக்க தாங்கள் உத்தரவிடவேண்டும்.

நூல் விலை உயர்வு

பஞ்சு விலை அதிகரிப்பைத் தொடர்ந்து, நூல் விலையும் கணிசமான அளவுக்கு உயர்ந்திருக்கிறது. இது போக, பெருமளவிலான நூலும் ஏற்றுமதிக்காக தயாராக உள்ளது. இதனால் நமது பின்னலாடை மற்றும் உடை தயாரிப்புத் துறைகளுக்கு தேவையான நூலுக்குத் தட்டுப்பாடு ஏற்படும். நம் நாட்டில் விசைத்தறி ஆடைகள், பின்னலாடை, பனியன், கைத்தறி ஆடை, ஆயத்த ஆடைகள் போன்ற துறைகளுக்கு வெவ்வேறு வகையான நூல்கள் தேவைப்படுகிறது. எனவே, அதற்கு ஏற்ற வகையில் தேவையான நூல் இருப்பதை நாம் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

நூல் ஏற்றுமதியை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும், நூல் ஏற்றுமதி செய்வோருக்கு வரி விதிக்க வேண்டும். நம் உள்நாட்டுத் தேவைக்கேற்ப பஞ்சு மற்றும் நூல் இருப்பு நன்றாக இருக்கும் வகையில் தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அந்த கடிதத்தில் முதல்–அமைச்சர் கருணாநிதி குறிப்பிட்டுள்ளார்.

## ஜனவரி – நவம்பர் மாத காலத்தில் காபி ஏற்றுமதி 57% உயர்வு



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

நடப்பு ஆண்டில், ஜனவரி முதல் நவம்பர் வரையிலான 11 மாத காலத்தில் நாட்டின் காபி ஏற்றுமதி 57 சதவீதம் உயர்ந்து 2.71 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. இது, 2009–ஆம் ஆண்டின் இதே காலத்தில் 1.72 லட்சம் டன்னாக இருந்தது.

இந்தியா முதலிடம்

ஆசியா கண்டத்தில் இந்தியாதான் காபி ஏற்றுமதியில் முதலிடத்தில் உள்ளது. சென்ற நிதி ஆண்டில் நாட்டின் ஒட்டுமொத்த காபி ஏற்றுமதி 2.04 லட்சம் டன்னாகவும், முந்தைய 2008–09–ஆம் நிதி ஆண்டில் 1.96 லட்சம் டன்னாகவும் இருந்தது.

நம் நாட்டில், சென்ற 2009–10–ஆம் ஆண்டு பருவத்தில் (அக்டோபர் – செப்டம்பர்) காபி உற்பத்தி 2.89 லட்சம் டன்னாக இருந்தது. இது, நடப்பு 2010–11 பருவத்தில் 3.08 லட்சம் டன்னாக உயரும் என காபி வாரியம் முன்னறிவிப்பு செய்துள்ளது. ஆக, இப்பருவத்தில் சுமார் 7 சதவீதம் அதிகரிக்க உள்ளது. உலகின் மொத்த காபி உற்பத்தியில் இந்தியாவின் பங்களிப்பு சுமார் 4 சதவீதமாக உள்ளது. உள்நாட்டில் தென் மாநிலங்களில்தான் அதிகளவில் காபி உற்பத்தி மேற்கொள்ளப்படுகிறது. நம் நாட்டில் லட்சக்கணக்கான காபி தோட்டங்கள் உள்ளன.

கர்நாடக மாநிலம்

நம் நாட்டில் காபி உற்பத்தியில் கர்நாடக மாநிலம் முதலிடத்தில் உள்ளது. நாட்டின் மொத்த காபி உற்பத்தியில் இம்மாநிலத்தின் பங்களிப்பு சுமார் 70 சதவீதமாகும். இங்கு குடகு, சிக்மகளூர் மற்றும் ஹசன் ஆகிய பகுதிகளில் அதிகளவில் காபி உற்பத்தி ஆகிறது. இந்திய காபி உற்பத்தி துறை சுமார் 6 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளித்துள்ளது. சர்வதேச அளவில் காபி உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் இந்தியாவின் பங்களிப்பு 3.5 சதவீத அளவிற்கே உள்ளது.

நாட்டின் மொத்த காபி ஏற்றுமதியில் ஜெர்மனி, ரஷ்யா மற்றும் இத்தாலி ஆகிய மூன்று

நாடுகளின் பங்களிப்பு 40 சதவீதமாக உள்ளது. உற்பத்தி அதிகரிக்கும் என்ற மதிப்பீடுகளால் அமெரிக்கா, ஜப்பான் தவிர்த்த புதிய சந்தைகளில் கவனம் செலுத்தும் வகையில் காபி வாரியம் ஏற்றுமதியாளர்களுக்கு ஊக்கமளித்து வருகிறது.

காபி பயன்பாடு

நடப்பு 2010 காலண்டர் ஆண்டில் இந்தியாவில் காபி பயன்பாடு ஒரு லட்சம் டன்னை தாண்டும் என காபி வாரியம் தெரிவித்துள்ளது. இது, கடந்த 2008–ஆம் ஆண்டில் 94,400 டன்னாகவும், 2009–ஆம் ஆண்டில் 97,000 டன்னாகவும் இருந்தது. நம் நாட்டில் காபி பயன்பாடு ஆண்டுக்கு 5–6 சதவீதம் என்ற அளவில் வளர்ச்சி கண்டு வருகிறது. உலக அளவில் காபி பயன்பாட்டில் அமெரிக்காதான் முதலிடத்தில் உள்ளது என காபி வாரியத்தின் தலைவர் ஜவாய்த் அக்தார் தெரிவித்துள்ளார்.

## உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் 8.6%–ஆக மேலும் சரிவு

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம், நவம்பர் 20–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 8.6 சதவீதமாக மிகவும் குறைந்திருந்தது. இது, கடந்த 18 மாதங்களுக்கு பிறகு தற்போது மிகவும் குறைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. நவம்பர் 13–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் இது 10.15 சதவீதமாக இருந்தது.

உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் மிகவும் குறைந்துள்ளது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது. இது, மேலும் குறையும் என்று மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்தார்.

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், குறிப்பிட்ட சில பருப்பு வகைகளின் விலை 10 சதவீதமும், காய்கறிகளின் விலை 3 சதவீதமும் குறைந்துள்ளது. குறிப்பாக, சென்ற ஆண்டுடன் ஒப்பிடும்போது, உருளைக்கிழங்கின் விலை 42.99 சதவீதம் சரிவடைந்துள்ளது. கோதுமையின் விலையும் 3.16 சதவீதம் குறைந்துள்ளது.

இருப்பினும், முட்டை, இறைச்சி விலை 15.58 சதவீதம் உயர்ந்துள்ளது. வெங்காயம்விலை 16.86 சதவீதமும், அரிசி விலை 1.84 சதவீதமும் அதிகரித்துள்ளது.

நவம்பர் 20–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், எரிபொருள் தொகுப்பு விலைப்புள்ளி 10.57 சதவீதத்தில் இருந்து 9.99 சதவீதமாக சரிவடைந்துள்ளது.

மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும், நாட்டின் ஒட்டுமொத்த

பணவீக்க விகிதம், சென்ற அக்டோபர் மாதத்தில் 8.58 சதவீதமாக குறைந்திருந்தது. இது, செப்டம்பர் மாதத்தில் 8.62 சதவீதமாக இருந்தது.

## இறைச்சிக்கான தேவைப்பாடு அதிகரிப்பதால் ஆடு வளர்ப்பில் வளமான வாய்ப்பு



ஜெயஸ்ரீ போஸ்லே பூனா

இறைச்சிக்கான தேவை தொடர்ந்து அதிகரித்து வருவதால், ஆடு வளர்ப்பு தொழிலில் வளமான வர்த்தக வாய்ப்புகள் உள்ளதாக வல்லுனர்கள் தெரிவித்துள்ளனர்.

நம் நாட்டில் இறைச்சிப் பிரியர்கள் அதிகம் உள்ளனர். அவர்களின் விருப்பமான உணவாக சிக்கன், மட்டன், மீன் ஆகியவை உள்ளன. பண்டிகை காலங்களில் இறைச்சி விற்பனை பல மடங்கு உயர்ந்து காணப்படும்.

தேவை அதிகரிப்பு

ஆட்டு இறைச்சி விலை ஒவ்வொரு ஆண்டும் 20 சதவீதம் உயர்ந்து வருகிறது. நம் நாட்டில் ஆந்திர மாநிலத்தில் ஆடுகள் அதிக அளவில் வளர்க்கப்படுகின்றன.

"நாட்டில் ஆடுகளின் உற்பத்தியைக் காட்டிலும், ஆட்டு இறைச்சிக்கான தேவை அதிகமாக உள்ளது. இந்தநிலை நீடித்தால் ஆஸ்திரேலியா மற்றும் பிற நாடுகளில் இருந்து ஆட்டு இறைச்சியை இறக்குமதி செய்யும் நிலை வரலாம்" என்று இத்துறையைச் சேர்ந்தவர்கள் தெரிவித்து உள்ளனர்.

"பண்டிகை காலங்களில், நல்ல தரமான ஆட்டு இறைச்சி கர்நாடகா மாநிலத்தில் இருந்து கொண்டு வரப்படுகிறது. சென்ற ஆண்டு பண்டிகை காலங்களில், ஒரு கிலோ ஆட்டு இறைச்சி ரூ.165 என்ற விலையில் ஏராளமான ஆடுகள் விற்பனை செய்யப்பட்டன. இந்த விலை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை நிர்ணயம் செய்யப்படுகிறது" என மணி வேளாண்மை மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் நிதின் மேனன்

தெரிவித்தார்.

லாபம் ஈட்டும் தொழில்

இது குறித்து மும்பை கால்நடைக் கல்லூரி முதல்வர் டாக்டர் அப்துல் சமத் கூறும்போது, "குறைவான முதலீட்டில், அதிக லாபம் ஈட்டும் தொழிலாக ஆட்டு இறைச்சி தொழில் உள்ளது. இந்த தொழிலை ஊக்குவிக்கும் வகையில், அரசு சரியான வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும். அரசு மதிப்பீட்டின் படி ஆடு வளர்ப்பு அதிகரித்து வருகிறது. ஆனால், மேய்ச்சல் நிலங்கள் குறைவாக இருப்பது இத்துறைக்கு மிகப்பெரிய சவாலாகும்" என்று தெரிவித்தார்.

## வெளி மாநிலங்களுக்கு செல்லும் லாரிகள் வேலை நிறுத்தம்: குன்னூரில், 13 லட்சம் கிலோ தேயிலை தூள் தேங்கும் அபாயம்

குன்னூர், டிச.3–

வெளிமாநிலங்களுக்கு செல்லும் லாரிகள் வேலை நிறுத்தம் காரண மாக குன்னூரில் 13 லட்சம் கிலோ தேயிலை தூள் தேங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

வேலை நிறுத்தம்

தேயிலை நெடுஞ்சாலை களில் வசூலிக்கப்படும் சுங்க வரியை சீரமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி வருகிற 5–ந் தேதி நள்ளிரவு முதல் காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட அகில இந்திய மோட்டார் போக்குவரத்து காங்கிரஸ் அழைப்பு விடுத்துள்ளது.

இந்த வேலை நிறுத்த போராட்டத்துக்கு அனைத்து மாநில லாரி உரிமையாளர் களும் ஆதரவு தெரிவித்து உள்ளனர். வேலை நிறுத்தத்தை வாபஸ் பெற கடந்த 29–ந் தேதி டெல்லியில் மத்திய தரை வழி போக்குவரத்து செயலாளர் முன்னிலையில் நடைபெற்ற பேச்சுவார்த்தை தோல்வி அடைந்தது.

பேச்சுவார்த்தை தோல் அடைந்ததால் லாரிகள் வேலை நிறுத்தம் செய்வது உறுதியாகி விட்டது. தமிழ்நாடு லாரி புக்கிங் ஏஜெண்டுகளும், லாரி உரிமையாளர்களுக்கு ஆதரவாக நேற்று முன்தினம் முதல் சரக்கு புக்கிங் செய்யும் பணிகளை நிறுத்தியுள்ளனர்.

பிரதான தொழில்

இந்த நிலையில் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் தமிழகத்தில் இருந்து வட மாநிலங்களுக்கு செல்லும் லாரிகள் நிறுத்தப்பட்டு உள்ளன. நீலகிரி மாவட்டத் தில் தேயிலை வர்த்தகம் தான் பிரதான தொழிலாக உள்ளது. மாவட்டத்தில் உள்ள தேயிலை தொழிற்சாலைகள் தயாரிக் கும் தேயிலை தூள் குன்னூரில் உள்ள தேயிலை ஏல

மையத்துக்கு விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது.

ஏல மையத்தில் ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும் தேயிலை தூள் வட மாநிலங் களுக்கு அதிக அளவில் கொண்டு செல்லப்படுகிறது. வட மாநிலங்களுக்கு செல்லும் லாரிகள் நிறுத்தப்பட்டு உள்ளதால், தேயிலை தூள் குன்னூரில் இருந்து வட மாநிலங்களுக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது.

தேக்கம் அடையும் அபாயம்

வெளிநாடுகளுக்கு செல்லும் தேயிலை தூள் கொச்சி துறை முகத்தில் இருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறது. வருகிற 5–ந் தேதி நள்ளிரவு முதல் அகில இந்திய அளவில் லாரி நிறுத்தம் போராட்டம் மேற்கொள்ளப் படுவதால் ஏற்றுமதி செய்யப் படும் தேயிலை தூளும் தேக்கம் அடையும் நிலை உள்ளது.

விற்பனை எண் 48–க்கான தேயிலை ஏலம் குன்னூர் தேயிலை ஏல மையத்தில் நேற்றும், இன்றும் நடை பெறு கிறது. இந்த ஏலத்தில் சுமார் 13 லட்சம் கிலோ தேயிலை தூள் ஏலம் விடப்படுகிறது.

லாரிகள் வேலை நிறுத்தம் காரணமாக ஏலத்தில் விற்பனையாகும் 13 லட்சம் கிலோ தேயிலை தூள் தேக்கம் அடையும் அபாய நிலை உள்ளது. ஏற்கனவே குன்னூர் தேயிலை ஏல மையத்தில் ஒவ்வொரு வாரமும் நடைபெறும் ஏலத்தில் தேயிலை தூள் தேக்கம் அடைந்து வருகிறது.

லாரிகள் வேலை நிறுத்தம் தொடர்ந்தால் மேலும் தேயிலை தூள் தேக்கம் அடைந்து பொருளாதார சீர்குலைவு ஏற்படும் நிலை உள்ளது. இதுமட்டுமின்றி பொதுமக்கள் அன்றாடம் பயன்படுத்தும் மளிகை பொருட்கள், காய்கறிகள் போன்றவைகளின் விலையும் விஷம் போல் ஏறும் அபாயம் இருந்து வருகிறது.

பொதுமக்களின் நன்மையை கருத்தில் கொண்டு லாரிகள் வேலை நிறுத்தத்தை பேச்சு வார்த்தை மூலம் உடனடி யாக தீர்க்க வேண்டும் என்று பொது நல அமைப்புகள் கோரிக்கை விடுத்து உள்ளன.

## இந்தியாவில் களை பயிர்களால் ஆண்டுக்கு 287 மில்லியன் டன் உணவு இழப்பு பல்கலைக்கழக துணைவேந்தர் தகவல்




கருத்தரங்கு மலரை பல்கலைக்கழக துணை வேந்தர் முருகேசபூபதி வெளியிட்டபோது எடுத்தபடம். பதிவாளர் சுப்பையன், ஆராய்ச்சி இயக்குனர் பரமாத்மா, மான்சான்டோ வேளாண் தொழில்நுட்ப உயிரியல் ஆலோசகர் மஞ்சுநாத் ஆகியோர் அருகில் உள்ளனர்.

*கோவை,டிச.3–*

*இந்தியாவில் களை பயிர்களால் ஆண்டுக்கு 287 மில்லியன் டன் உணவு இழப்பு ஏற்படுகிறது என்று பல்கலைக்கழக துணைவேந்தர் கூறினார்.*

*கருத்தரங்கு*

*கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் பயிர் சாகுபடியில் களை கட்டுப்பாடு மற்றும் அதில் ஏற்படும் புதிய சவால்கள் என்ற தலைப்பில் 2 நாள் கருத்தரங்கு நடைபெற்றது. இதன் தொடக்க விழா பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள கலையரங்க கூடத்தில் நடைபெற்றது.*

*பல்கலைக்கழக ஆராய்ச்சி இயக்குனர் பரமாத்மா தலைமை தாங்கினார். பயிர் வேளாண்மை இயக்குனர் ஜெயராமன் வரவேற்றார். பதிவாளர் சுப்பையன், மான்சான்டோ வேளாண் உயிரியல் தொழில்நுட்ப ஆலோசகர் மஞ்சுநாத் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். கருத்தரங்கை பல்கலைக்கழக துணைவேந்தர் முருகேசபூபதி தொடங்கி வைத்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–*

*பூச்சி நோய் தாக்குதல்*

*கடந்த 60 ஆண்டுகளில் உணவு தானிய உற்பத்தி 53 மில்லியன் டன்களாக இருந்தது.*

கடந்த 2008–ம் ஆண்டில் 230 மில்லியன் டன்களாக உயர்ந்துள்ளது. வருகிற 2020–ம் ஆண்டில் உணவு தானிய உற்பத்தி 59 மெட்ரிக் டன் அதிகரித்து 293 மெட்ரிக் டன் என்ற அளவை எட்டும். குறிப்பாக எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி தற்போதைய அளவான 29.75 மெட்ரிக் டன் என்ற அளவில் இருந்து 2 மடங்காக அதிகரிக்கும்.

இந்தியாவை பொறுத்தவரை பயிர் மகசூல் பாதிப்பு 45 சதவீதம் களைகளால் ஏற்படுகிறது. குறிப்பாக 30 சதவீதம் எலித் தொல்லைகளாலும், 20 சதவீதம் பல்வேறு வகையான பூச்சி நோய் தாக்குதலாலும் சேதம் அடைகிறது. இதே போல் களைகளால் அரிசி உற்பத்தியில் 69 சதவீதமும், கோதுமையில் 34 சதவீதமும், 72 சதவீதம் கரும்பிலும், 80 முதல் 90 சதவீதம் வரை காய்கறிகளிலும் இழப்பு ஏற்படுகிறது. களைகளால் மட்டும் ஆண்டு ஒன்றுக்கு மொத்தமாக 287 மில்லியன் டன் உணவு இழப்பு ஏற்படுகிறது. இது மொத்த உலக உணவு உற்பத்தியில் 11 சதவீதம் ஆகும்.

களை அறிவியல் ஆராய்ச்சி

உலக அளவில் 30 ஆயிரம் தாவர இனங்கள் களைகளாகும். அதில் 250 வகையான களைகள் பிரச்சினைக்கு உரியதாகும். தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் களை அறிவியல் ஆராய்ச்சி பணி கடந்த 1982–ம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது.

இந்த ஆராய்ச்சிகளை கட்டுப்பாட்டு முறையை உருவாக்கி உள்ளது. குறிப்பாக பார்த்தீனியம் மற்றும் ஆகாயத்தாமரைகளை கட்டுப்படுத்தும் பல புதிய வழிமுறைகளை பல்கலைக்கழகம் உருவாக்கி உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.விழாவில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், விஞ்ஞானிகள், பேராசிரியர்கள், மாணவர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## கூடலூர் ஜீன்பூல் தாவரவியல் மையத்தில் 2 ஏக்கரில் மூலிகை பண்ணை



கூடலூர் ஜீன்பூல் மையத்தில் உள்ள மூலிகை பண்ணையில் நடவு செய்யப்பட்ட மூலிகை செடியை பராமரிக்கும் பணியில் பணியாளர் ஒருவர் ஈடுபட்டுள்ள காட்சி.

கூடலூர், டிச.3–

கூடலூர் ஜீன்பூல் தாவரவியல் மையத்தில் 2 ஏக்கர் பரப்பளவில் மூலிகை பண்ணை அமைக்கப்பட்டுள்ளது. இதனால் மூலிகை செடிகளை பராமரிக்கும் பணியில் ஜீன்பூல் பணியாளர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

ஜீன்பூல் மையத்தில் மூலிகை பண்ணை

கூடலூர் நாடுகாணி ஜீன் பூல் தாவரவியல் மையத்தில் திசு வளர்ப்பு மையம், ஆர்கிட் குடில்கள், கண்காட்சி அறை கள், காட்சி கோபுரங்கள் உள் ளன. வேவ்வேறு பிரதேசங் களில் வாழக்கூடிய தாவரங் களை கொண்டு வந்து அதனு டைய காலநிலைகளுக்கு ஏற்ப இந்த மையத்தில் வைத்து பரா மரிக்கப்பட்டு திசு வளர்ப்பு முறையில் புதிய தாவரங்கள் உருவாக்கப் படுகின்றன.

இந்த நிலையில் ஜீன்பூல் மையத்தில் அடர்ந்த புல்வெளி பகுதிகள் நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பளவு உள்ளது. இதில் சுமார் 2 ஏக்கர் பரப்ப ளவில் கூடலூர் வன அலுவல ராக பணியாற்றி வந்த சதீசின் முயற்சியால் மூலிகை பண்ணை உருவாக்கும் பணி கள் தொடங்கப்பட்டது.

கல்வி சுற்றுலா

சிறுகுறிஞ்சி, முடக்கத்தான், கருநொச்சி, வாதமுடக்கி, வால்மிளகு, வசம்பு உள்பட 69 வகையான மூலிகை செடிகள் நடப்பட்டு ஜீன் பணியாளர்களால் நன்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு நடப்பட்ட அரிய வகை மரங்கள் அதிகளவு வளர்ந்து பசுமையாக காட்சி அளிக்கின்றன.

இதனால் கூடலூர், பந்தலூர் தாலுகாவில் மட்டுமின்றி அண்டை மாநிலமாக கேரளாவில் இருந்து தினமும் ஏராளமான பள்ளிக்கூட மாணவ– மாணவிகள் கல்வி சுற்றுலாவாக கூடலூர் ஜீன்பூல் மையத்துக்கு வருகை தருவதை தற்போது காணமுடிகிறது.

கோரிக்கை

இந்த மையத்தை இன்னும் சிறப்பாக பராமரித்தால் இயற்கை ஆர்வலர்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் சிறந்த புகலிடமாக விளங்கும். எனவே ஜீன்பூல் மையத்தை இன்னும் தரம் உயர்த்த சம்பந்தப்பட்ட துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

# குன்னூர் டீசர்வ் ஏல மையத்தில் தேயிலை தூள் விலை உயர்வு

குன்னூர், டிச.3–

குன்னூர் டீசர்வ் ஏல மையத்தில் தேயிலை தூள் விலை உயர்வு ஏற்பட்டது.

கூட்டுறவு தொழிற்சாலைகள்

நீலகிரி மாவட்டத்தில் உள்ள சிறு தேயிலை விவசாயி களின் நலனை கருத்தில் கொண்டு கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் செயல் பட்டு வருகின்றன. இந்த தொழிற்சாலைகளில் உறுப் பினர்களாக உள்ள சிறு தேயிலை விவசாயிகள் தங்களது தோட்டங்களில் அறுவடை செய்யும் பச்சை தேயிலையை கூட்டுறவு தொழிற்சாலைகளுக்கு வழங்கி வருகின்றனர்.கடந்த 2002–ம் ஆண்டு கூட்டுறவு தேயிலை தொழிற் சாலைகளின் ஏல மையமான டீசர்வ் ஏல மையம் கம்ப் யூட்டர் மயமாக்கப்பட்டது. மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு தேயிலை தொழிற் சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் தேயிலை தூள் டீசர்வ் ஏல மையத்தில் வாரந் தோறும் புதன் கிழமை ஏலம் விடப்படுகிறது.

விலை உயர்வு

டீசர்வ் ஏல மையத்தில் 46–வது தேயிலை ஏலம் கடந்த 1–ந் தேதி நடைபெற்றது. ஏலத்துக்கு மொத்தம் 3 லட்சத்து 78 ஆயிரத்து 714 கிலோ வந்தது. இதில் 2 லட்சத்து 21 ஆயிரத்து 692 கிலோ இலை ரகமும், 1 லட்சதது 57 ஆயிரத்து 72 கிலோ டஸ்ட் ரகமும் அடங்கும். ஏலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் அதிக அளவில் பங்கேற்று தேயிலை தூளை ஆர்வமுடன் ஏலம் எடுத்தனர். இதன் காரணமாக தேயிலை தூளின் சாதாரண மற்றும் நடுத்தர வகைகளுக்கு ரூ.3 விலை ஏற்றம் இருந்தது.

டஸ்ட் ரகத்துக்கு ரூ.4 வரை விலை உயர்வு ஏற்பட்டது. ஏலத்தில் வர்த்தகர்களின் பங்களிப்பு அதிக அளவு இருந்ததால் ஏல மையத்துக்கு வந்த தேயிலை தூள் 100 சதவீதம் விற்பனையானது.

எதிர்பார்ப்பு

தேயிலை தூளின் இலை ரகத்தின் சாதாரண வகைக்கு ரூ.48–ல் இருந்து ரூ.52 வரை யிலும், விலை உயர்ந்த தேயிலை தூளுக்கு ரூ.65–ல் இருந்து ரூ.70 வரையிலும் ஏலம் சென்றது. டஸ்ட் ரகத்தின் சாதாரண வகை ரூ.55 முதல் ரூ.60 வரையிலும் விலை உயர்ந்த தேயிலை தூள் ரூ.65–ல் இருந்து ரூ.75 வரை யிலும் ஏலம் சென்றது.கூட்டுறவு தேயிலை தொழிற் சாலைகளின் தேயிலை தூளுக்கு விலை உயர்வு ஏற்பட்டதால் சிறு விவசாயி கள் வழங்கும் பச்சை தேயி லைக்கும் விலை கூடுதலாக கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு கூட்டுறவு தேயிலை தொழிற் சாலை உறுப்பினர்களான சிறு விவசாயிகளிடம் நிலவு கிறது.